# பாயிரவியல்

பாயிரம் என்பது நூலின் வரலாற்றை எடுத்துரைக்கும் பகுதியாகும். பாயிரத்தை நூலின் முன்னுரையாகவும் கூறுவர். ஒருவரை அடையாளம் காட்டும் முகம்போல நூற்பொருளை அடையாளம் காட்டி அறிய பாயிரம் உதவுகிறது.

பாயிரம் முகவுரை, பதிகம், அணிந்துரை, நூன்முகம், புறவுரை, தந்துரை, புனைந்துரை என ஏழு பெயர்களில் அமையும். இப்பாயிரம் சிறப்புப் பாயிரம், பொதுப்பாயிரம் என இரு வகைப்படும்.

## பொதுப்பாயிரம்

1. நூலின் இலக்கணம் 2. நூலைக் கற்பிக்கும் ஆசிரியரது இலக்கணம், 3. பாடம் சொல்லிக் கொடுக்கும் முறை 4. மாணவரது இலக்கணம் 5. மாணவர் பாடம் கேட்கும் முறை ஆகியவற்றை விளக்குவது பொதுப்பாயிரமாகும். இவை எல்லா நூற்கும் பொதுவாய் அமையும்.

## நூலின் இலக்கணம்

நூல் என்பது, இருவகைப் பாயிரங்களைப் பெற்று, முதல், வழி, சார்பு நூல்களில் ஒன்றாக அமைதல் வேண்டும். அறம், பொருள், இன்பம், வீடுபேறு என்கிற நான்கு உறுதிப்பொருள்களையும் தருதல் வேண்டும். ஏழு வகை கோட்பாடுகளை உள்ளடக்கி, பத்துக் குற்றம் அகற்றி, பத்து அழகுகளைப் பெற்று, முப்பத்திரண்டு உத்தியை பொருந்தப் பெற்றிருக்க வேண்டும். ஓத்து, படலம் என்னும் உறுப்புக்களைப் பெற்று சூத்திர யாப்பால் அமைந்து காண்டிகை அல்லது விருத்தி உரைகளைப் பெற்றதாகவோ அமையும். இப்பதின்மூன்று நடைகளைப் பெற்று வருதல் நூலாகும்.

## நூலின் வகைகள்

முதல் நூல், வழி நூல், சார்பு நூல் என நூல் மூன்று வகைப்படும். இறைவன் அருள் பெற்ற சான்றோரால் அமையப் பெறுவது முதல் நூல். முதல் நூலைப் பின்பற்றி கால மாற்றித்திற்கேற்ப சில மாற்றங்களைப் பெற்றிருப்பின் வழி நூலாகும். முதல் நூல், வழி நூல் முடிவுகளைச் சிறிது ஏற்று, பெரும்பான்மை வேறுபட வருவது சார்பு நூலாகும்.



Scanned by CamScanner

Scanned by CamScanner

### எழு வகை மதங்கள் (கொள்கைகள்)

1.பிறர் கொள்கைக்கு உடன்படுதல். 2.பிறர் கொள்கையைப் புறக்கணித்தல் 3.முதலில் ஏற்று பின் மறுத்தல். 4.தானே கருத்தைத் தோற்றுவித்தல். 5.மாறுபட்ட இருவரின் கருத்தில் ஒருவர் கருத்தை ஏற்றல். 6.பிறரது நூலின் குற்றத்தைத் தயக்கமில்லாமல் எடுத்துரைத்தல். 7.தன் கருத்தையே கைக்கொள்ளுதல்.

### பத்துக்குற்றம்

1.சுருங்கச்சொல்லல். 2.சுருங்கச் சொல்ல வேண்டிய இடத்தில் விரித்துரைத்தல் 3.சொல்லியவற்றையே திரும்பத் திரும்ப கூறுதல் 4.முரண்பாடாகக் கூறுதல் 5.குற்றமுடைய சொற்களை அமைத்தல் 6.பொருளில்லாமல் தேவையற்றதை உரைத்தல் 8.தொடங்கியதை விடுத்து வேறொன்றாய் அமைத்துச் சொல்லுதல். 9.சிறப்பாகத் தொடங்கி சிறப்பின்றி முடித்தல்10.சொற்கள் இருந்தும் பயனில்லாமை. இக் குற்றங்களை நலலாசிரியர் களைய வேண்டும்.

### பத்து அழகுகள்

1.தேவையில்லாமல் விவரிக்காது சுருக்கமாய்ச் சொல்லுதல். 2.சுருங்கச் சொன்னாலும் விளங்க வைத்தல் 3.கற்போர்க்கு இனிமையான சொற்களை அமைத்தல் 4.நன்மை பயக்கும் சொற்களைப் புணர்த்தல் 5.சந்த நயத்தை அமைத்தல் 6.பொருள் ஆழமுடையதாய் இருத்தல் 7.இயல்கள் முறைப்படி அமைதல் 8.கற்றவர்களாகிய சான்றோர்க்கு பொருள் விளங்கிக் கொள்ளும்படி அமைத்தல்( மலைப்புத் தன்மை ஏற்படாத படி செய்தல்). 9.சிறந்த பொருளை வெளிப்படுத்துதல். 10.சிறந்த எடுத்துக்காட்டுகளுடன் பொருளை விளங்கவைத்தல். இவை பத்தும் நூலுக்கு அழகு சேர்ப்பவைகளாகும்.

### உத்திகள்

யுக்தி என்ற சமஸ்கிருதச் சொல்லே தமிழில் உத்தி என அழைக்கப்படுகிறது.பொருத்தப்பாடாய் அமைக்கும் முறையாகும். உலக வழக்கோடும், மொழி வழக்கோடும் பொருந்தும்படி எடுத்துக்காட்டி இடத்திற்குத் தகுந்தவாறு பொருள் இயைபுடன் ஏற்புடையதாக அமைத்து விவரிக்கும் முறையே உத்தி ஆகும். நுதலிப் புகுதல் முதலாக உய்த்துணர வைத்தல் ஈறாகச் சொல்லப்பட்ட முப்பத்திரண்டும் நூலில் பயன்படுத்தப்படும் உத்திகளாகும்.



Scanned by CamScanner

Scanned by CamScanner

## ஒத்து

ஓரினமான மணியை நிரல்படக் கோர்த்து வைத்தாற் போல ஓரினக் கருத்துக்களை ஒன்றுபட வரிசை முறையில் அமைத்துக் கூறுவது ஒத்து எனப்படும்.

## படலம்

வெவ்வேறு இனமான கருத்துக்கள் உடையவற்றை அவற்றுக்கிடையில் காணப்படும் பொது இயல்பு காரணமாக இணைத்து விவரித்துக் காட்டுவது படலமாகும். பல இயல்கள் இணைந்தது படலம் ஆகும்.

## சூத்திரம்

சிறிய கண்ணாடி பெரிய உருவத்தையும் உள்ளடக்கித் தெளிவாகக் காட்டுவது போல் சில வகை எழுத்துக்களால் பலவகைப்பட்ட பெரிய பொருளை உள்ளடக்கி இனிதாக வெளிப்படுத்துவது சூத்திரமாகும். ஆற்றொழுக்கு, அரிமா நோக்கம், தவளைப் பாய்த்து, பருந்தின் வீழ்வு போன்று சூத்திரத்தின் பொருள்நிலை அமையும். பிண்டம், தொகை, வகை, குறி, செய்கை, புறனடை என ஆறு வகைப்படும்.

## உரையின் இலக்கணம்

இலக்கண நூல்களின் யாப்பு நுப்பமானவை, பொருள் செறிந்தவை. கற்றறிந்த சான்றோர்களால் மட்டுமே விளங்கிக் கொள்ளுகின்ற திட்பம் வாய்ந்தவை. இப்படியான இலக்கணங்களுக்கு உரை முக்கியமான தேவையாகின்றது. 1. மூலபாடத்தை எடுத்துரைத்தல் 2. கருத்துரை கூறுதல் 3. சொல்வகை சொல்லுதல் 4. சொல்லுக்குப் பொருள் கூறல் 5. தொகுத்துக் கூறல் 6. மேற்கோள் காட்டல் 7. ஐயம் தோற்றுவித்தல் 8. அதற்கு விடைகூறல் 9. சிறப்புப் பொருளை எடுத்துரைத்தல் 10. விளக்கமுறக் கூறல் 11. பொருத்தமுறக் காட்டல் 12. துணிந்து பொருள் கூறல் 13. பயனை எடுத்துரைத்தல் 14. தொன்னூல் ஆசிரியர் பாடங்களை பொருத்திக் காட்டல் இவை உரையின் இலக்கணமாகும். இவ்வுரை விருத்தியுரை, காண்டிகையுரை என இரண்டு வகைப்படும்.



Scanned by CamScanner

Scanned by CamScanner

## நூல் பெயர்க்காரணம்

நூல் என்பது காரணப்பெயர். ஒருபெண் கையினால் ராட்டை கொண்டு பஞ்சை நூலாக நூற்பது போல் ஒரு புலவன் அறிவாகிய கருவி கொண்டு சொற்களால் செய்யுள் செய்து நூலாக்குகின்றான்.

வளைந்த மரத்தின் கோணலைப் போக்கப் பயன்படுத்துவது எற்று நூல். அது போல் மனித மனத்தின் மனக்கோணலைப் போக்கி நல்வழியில் செலுத்துதல் நூலின் மாண்பாகும்.

## ஆசிரியர்

ஆசிரியர் என்பவர் நற்குடியில் பிறந்தவராகவும் இரக்க உணர்வு. தெய்வவழிபாடு, மேன்மையுடைய செயல்கள், நூல்கள் கற்றுத் தெரிந்த அறிவு, எடுத்துச் சொல்லும் ஆற்றல் இது மட்டுமல்லாது நிலம், மலை, மலர், நிறைகோல் இவற்றினைப் போன்ற மாண்புகளை உடையவராயிருத்தல் வேண்டும்.மேற்கூறிய குணங்களுக்கு மாறான குணமுடையவர் ஆசிரியர் ஆகாதவர் ஆவர். கழற்குடம், மடற்பனை, பருத்திக்குண்டிகை, முடத்தெங்கு ஆகியனவற்றை போல் ஆசிரியர் இருக்கக்கூடாது.

## பாடம் சொல்லிக் கொடுக்கும் முறை

நல்ல இடத்தை தேர்ந்தெடுத்து, மாவணவர்கள் தன்னைக் காணும்படி அமர்ந்து, தன் தெய்வம் வாழ்த்தி, சொல்லும் பொருள் உள்ளத்து அமைத்து பொறுமையுடன் முகம் மலர்ந்து விருப்பத்தோடு மாணவர் மனமறிந்து தன் மனம் கோணாமல் பாடம் கற்பிக்க வேண்டும்.

## மாணவர் இலக்கணம்:

தன் மகன், தனது ஆசிரியர் மகன், பொருள் நனிகொடுப்போன், மதித்து வழிபடுபவன், பாடத்தைக் கற்றுக்கொள்ளும் ஆர்வமுடையவன் இவர்களெல்லாம் மாணவர்களாக ஏற்கத் தகுந்தவர்கள் ஆவர்.

## மாணவர் வகைப்பாடு:

அன்னம், பசு போன்ற தன்மையுடையவர் முதல் மாணாக்கர், மண், கிளி குணம் உடையோர் இடை மாணாக்கர், இல்லிக்குடம், ஆடு,நெய்யரி (பன்னாடை), எருமை குணம் கொண்டோரெல்லாம் கடை மாணாக்கர்கள் ஆவர்.



Scanned by CamScanner

Scanned by CamScanner

## மாணவர் ஆகாதவர்:

குடிகாரன்,சோம்பேறி, தற்பெருமை கொண்டவன், காமுகன், திருடன், நோயாளி, வறுமையில் வாடுபவன், ஆசிரியரின் கருத்தில் பிணக்கம் (மாறுபாடு) கொண்டவன், கோபம் கொண்டவன், தூங்குபவன், மனதில் ஏற்றுக் கொள்ளும்திறம் அற்றவன், நூலைப் பார்த்து அஞ்சுபவன், முரடன், தீவினை செய்பவன், பொய் பேசுபவன் இவர்களுக்கு ஆசிரியர்கள் பாடம் சொல்லித்தரமாட்டார்கள்.

## மாணவர் பாடம் கேட்கும்முறை

காலம் தவறாது சென்று, ஆசிரியரை வழிபாடு செய்து, ஆசிரியரின் உள்ளக்குறிப்பு அறிந்து பழகுதல் வேண்டும். ஆசிரியர் இரு என சொன்னதும் இருந்து முன்பு கற்ற பாடத்தை சொல் என்றதும் சொல்லி தாகத்தில் இருப்பவன் விருப்பத்தோடு நீரைப் பருகுவது போல ஆவர்வமுடன் கற்றல் வேண்டும். சித்திரப் பாவை போல அடக்கமுடன் அமர்ந்து செவி வாயாகவும், மனம் கொள்களமாகவும் கொண்டு, கேட்ட பாடங்களை விடாது உள்ளத்தில் அமைத்தல் வேண்டும். ஆசிரியர் போ என்றதும் போதல் வேண்டும்.

## நூலைப் பயிலும் முறை

நூல் வழக்கினை அறிதல், பாடத்தை மதித்தல், கேட்ட பாடங்களை நினைவுக்குக் கொண்டு வருதல், ஆசிரியருடன் நெருங்கிப் பாடம் கேட்டல், பிற மாணாக்கரோடு சேர்ந்து பயிலுதல், வினா தொடுத்தல், வினாவுக்குரிய விடையைக் கூறுதல். இவற்றைக் கடமையாகக் கொண்டால் அறியாமை விரைவில் நீங்கும்.ஒருமுறை பாடம் கேட்டவன் இருமுறை கேட்பானாயின் பிழையின்றி பாடத்தை அறிந்து கொள்ளுவான். மூன்று முறை கேட்பானாயின் குறையில்லாது பிறருக்கு எடுத்துரைக்கும் திறனைப் பெறுவான். ஆசிரியர் கற்பிக்கும் போது நன்முறையில் கேட்டு அறிந்தாலும் கால்பங்கு அறிவையே பெறுகிறான். பிற மாணாக்கரிடம் சேர்ந்து பயிலும் போது கால்பங்கு அறிவைப் பெறுகிறான். பிறருக்கு எடுத்துரைக்கும்போது அரைப்பங்கு அறிவைப் பெறுகிறான்.குளிர்காய்பவன் தீயை நெருங்காமலும் தீயை விட்டு விலகாமலும் அமர்ந்து இருப்பதைப் போலவும் தன்னைவிட்டு நீங்காத நிழலைப் போலவும் ஆசிரியரிடம் பழகுதல் வேண்டும்.



Scanned by CamScanner
Scanned by CamScanner

**சிறப்புப் பாயிரத்தின் இலக்கணம்**

ஆசிரியர் பெயர், நூல் பின்பற்றிய வழி, எல்லை, நூலின் பெயர், யாப்பு, (தொகைவகை, விரி) நூலின் பொருள், கேட்போர், காலம், களம், காரணம், பயன் ஆகிய செய்திகளை உள்ளடக்கியது சிறப்புப்பாயிரம். நூல் ஆசிரியரின் ஆசிரியர் தன்னுடன் பயின்றோர், தன் மாணாக்கன், உரையாசிரியர் ஆகியோர் சிறப்புப் பாயிரம் எழுதுவதற்குரியவர் ஆவர். தற்புகழ்ச்சி குற்றம் என்பதால் மேற்கூறியோர் சிறப்புப் பாயிரத்தைச் செய்கின்றனர்.மன்னனது அவைக்கு ஓலை கொண்டு செல்லும்போதும், தன் ஆற்றலை உணராதவரிடத்தும், போட்டியில் பங்குபெறும் போதும், எதிரி தன்னைப் பழிக்கும் போதும் தன்னைத் தான் புகழ்தல் குற்றமாகாது.அகன்ற பெரிய நூலாக இருந்தாலும் பாயிரம் இல்லையெனில் நூல் ஆகாது. மாடங்களுக்கு ஓவியம் போலவும் மாநகருக்குக் கோபுரம் போலவும் அழகிய பெண்களுக்கு அணிகலன்கள் அழகைத் தருவது போலவும் நூலுக்கு அழகு சேர்ப்பது பாயிரமாகும்.



Scanned by CamScanner

Scanned by CamScanner

## பாயிரவியல்

### பாயிரத்தின் பெயர்கள்

1. முகவுரை பதிகம் அணிந்துரை நூன்முகம்
புறவுரை தந்துரை புனைந்துரை பாயிரம்.

முகவுரை, பதிகம், அணிந்துரை, நூன்முகம், புறவுரை, தந்துரை, புனைந்துரை என்பன பாயிரத்திற்குறிய வேறு பெயர்களாகும்.

பாயிரம் என்பது நூலினது வரலாற்றைக் குறிக்கும். நூலுக்கு முன் சொல்லப்படுகின்ற காரணத்தினால் முகவுரை, நூன்முகம் என்ற பெயர்களால் குறிக்கப்படுகிறது. பதிகம் பொதுவான ஐந்து வரலாற்றையும் பதினோரு சிறப்புமாகிய பலவகைப் பொருளையும் தொகுத்துச் சொல்வது பதிகம். நூலினது பெருமை விளங்கும்படியாக அலங்கரித்துச் சொல்வது அணிந்துரை, புனைந்துரை இரண்டும், ஆகும். நூல் சொல்லிய பொருள் அல்லாதவற்றைச் சொல்வது புறவுரை. நூலில் சொல்லப்பட்ட பொருள் அல்லாதவைகளை அதற்குத் தந்து சொல்வதனால் அது தந்துரை.

பாயிரம் – வரலாறு

### பாயிரத்தின் இரு வகைகள்

2. பாயிரம் பொது சிறப்பென இருபாற்றே.

1.பொதுப்பாயிரம் 2.சிறப்புப்பாயிரம் எனப் பாயிரம் இரு வகைப்படும்.

### பொதுப் பாயிரத்தின் இலக்கணம்

3.நூலே நுவல்வோன் நுவலும் திறனே
கொள்வோன் கோடல் கூற்றாம் ஐந்தும்
எல்லா நூற்கும் இவை பொதுப்பாயிரம்

நூலினது வரலாறு, ஆசிரியனது வரலாறு, ஆசிரியன் மாணாக்கனுக்கு நூலைச் சொல்லிக் கொடுக்கின்ற முறைமை, மாணாக்கனது வரலாறு, அவன் பாடம் கேட்கின்ற முறைமை ஆகிய ஐந்தும் எல்லா நூல்களுக்கும் பொதுவாக அமையும். பொதுவாக அமையக்கூடிய இவ் ஐந்தின் வரலாற்றை உணர்த்துதலால் பொதுப்பாயிரம் ஆயிற்று.



Scanned by CamScanner
Scanned by CamScanner

## 1.நூலினது வரலாறு

**நூலின் பொது இலக்கணம்**

4. நூலின் இயல்பே நுவலின் ஓரிரு
பாயிரம் தோற்றி மும்மையின் ஒன்றாய்
நாற்பொருள் பயத்தோடு எழுமதம் தழுவி
ஐயிரு குற்றமும் அகற்றி அம்மாட்சியோடு
எண்ணான்கு உத்தியின் ஒத்துப் படலம்
என்னும் உறுப்பினில் சூத்திரம் காண்டிகை
விருத்தி ஆகும் விகற்பநடை பெறுமே.

நூலினது வரலாற்றைச் சொல்லின் 1. பொது, 2.சிறப்பு ஆகிய இருவகைப்பாயிரங்களையும் பெற்றிருக்கும். 3. முதல் நூல், வழிநூல் சார்புநூல் ஆகிய மூன்றனுள் ஏதேனும் ஒன்றாய் அமையும். 4. அறம், பொருள், இன்பம், வீடு பேறடைதல் ஆகிய நான்கு உறுதிப்பொருள்களைப் பயப்பதாய் அமையும்.5. ஏழுவகை மதங்களைத் தழுவி நிற்கும். 6. பத்துக் குற்றங்கள் அகற்றி, 7. பத்து அழகுகளைப் பெற்று விளங்கும். 8. முப்பத்திரண்டு உத்திகளைப் பொருந்தப் பெற்றிருக்கும். 9. ஓத்து 10. படலம் என்னும் உறுப்புகளைப் பெற்று இருக்கும். 11. சூத்திர யாப்பால் இயற்றப்பட்டிருக்கும். 12. காண்டிகை 13. விருத்தி உரைகளைப் பெற்றதாக அமைந்திருத்தல் வேண்டும். மேற்கண்ட 13 உறுப்புக்களை உள்ளடக்கி அமைதல் நூலாகும்.

## மூவகை நூல்கள்

**5. முதல்வழி சார்பென நூல்மூன்றாகும்.**

1. முதல்நூல், 2.வழி நூல், 3.சார்பு நூல் என நூல் மூன்று வகைப்படும்.



Scanned by CamScanner

Scanned by CamScanner

## முதல் நூல்

6. அவற்றுள்,

**வினையின் நீங்கி விளங்கிய அறிவின்**
**முனைவன் கண்டது முதல் நூல் ஆகும்.**

மேற்சொன்ன மூன்றனுள், நல்வினை, தீவினை ஆகிய இரண்டிலும் இருந்து நீங்கிய தெளிந்த அறிவினை உடையவனாகிய இறைவனால் செய்யப்பட்டது முதல்நூல் ஆகும்.

இறைவனின் திருவருளைப் பெற்ற சான்றோர்களால் செய்யப் பெறுவதும் முதல்நூல் என்று கருதப்படும்.

(எ.கா) அகத்தியம், இறையனார் களவியல் போன்றன.

## வழிநூல்

**7. முன்னோர் நூலின் முடிவுஒருங்கு ஒத்துப்**
**பின்னோன் வேண்டும் விகற்பம் கூறி**
**அழியா மரபினது வழிநூல் ஆகும்.**

முன்னோர் இயற்றிய முதல்நூலின் மரபுகளைப் பெரிதும் ஏற்று, காலத்திற்கு ஏற்ற மாற்றங்களைத் தம் நூலில் இணைத்து எல்லோராலும் போற்றப்படுகின்ற வகையில் பெருமை உடையதாய்ச் செய்வது வழிநூல் ஆகும்.

(எ.கா) தொல்காப்பியம்

## சார்பு நூல்

**8. இருவர் நூற்கும் ஒருசிறை தொடங்கித்**
**திரிபுவேறு உடையது புடைநூல் ஆகும்.**

முதல்நூல், வழிநூல் இரண்டின் முடிவைச் சிறுபான்மை ஏற்றும் பெரும்பான்மை ஏற்காமலும் வேறுபட்டு நிற்பது (சார்பு நூல் - புடைநூல்).

(எ.கா) நன்னூல்



Scanned by CamScanner

Scanned by CamScanner

**வழிநூல், சார்பு நூல்களுக்குச் சிறப்பு விதி**

9. முன்னோர் பொருளே அன்றி அவர்மொழியும்
பொன்னேபோல் போற்றுவம் என்பதற்கும் -முன்னோரின்
வேறுநூல் செய்வதும்எனும் மேற்கோளில் என்பதற்கும்
கூறுபழஞ் சூத்திரத்தின் கோள்.

முதல் நூலை வைத்து வழிநூலையும் சார்பு நூலையும் செய்வோர் முதல் நூலின் கருத்தை எடுத்துச் சொல்லுதல் வேண்டும். அது மட்டுமல்லாது, முன்னோர் சொன்ன மொழிகளைப் பொன்னே போல் போற்றி உள்ளோம் என்பதற்கு அடையாளமாக, முதல் நூலில் கூறிய விதிகள் இந்நூலில் எடுத்தாளப்படவில்லை என்னும் குற்றம் நீங்கும் வகையில் முதல் நூல் கருத்துக்களை சில இடங்களில் அப்படியே மாற்றம் செய்யாது கையாளுதல் வேண்டும்.

**நூற்பயன்**

10. அறம்பொருள் இன்பம் வீடுஅடைதல் நூற்பயனே.

அறம், பொருள், இன்பம், வீடு பேறடைதல் ஆகிய நான்கும் நூலால் ஏற்படும் பயன்களாகும்.

**எழுவகை மதம்**

11. எழுவகை மதமே உடன்படல் மறுத்தல்
பிறர்தம் மதமேற் கொண்டு களைவே
தாஅன் நாட்டித் தனாது நிறுப்பே
இருவர் மாறுகோள் ஒருதலை துணிவே
பிறர்நூல் குற்றம் காட்டல் ஏனைப்
பிறிதொரு படாஅன் தன்மதம் கொளலே.



Scanned by CamScanner

Scanned by CamScanner

மதம் ஏழு வகைப்படும். 1. பிறர் கொள்கையை ஏற்றுக் கொள்ளும் வகையில் தன் கொள்கையை அமைத்தல். 2. பிறர் கொள்கையைப் பொருந்தாது என மறுத்தல். 3. ஒருவர் சொல்லாக ஏற்றுக்கொண்டு பின்னர் அக்கொள்கையை மறுத்தல். 4. தான் ஒரு கருத்தை உருவாக்கிக் கொண்டு அதை வாய்ப்பாக வரும் இடங்களிலெல்லாம் தவறாது நிலை நாட்டிச் செல்லல். 5. மாறுபட்ட இருவர் கருத்தில் ஒருவர் கருத்தை ஏற்றுக் கொள்ளல். 6. பிறர் நூலில் உள்ள குற்றங்களைத் தயக்கமின்றி எடுத்துரைத்தல் 7. பிறர் கருத்தை ஏற்காது தன் கருத்தையே கையிலெடுத்தல்

மதம் – கொள்கை, கோட்பாடு

நூல் என்பது மேற்சொன்ன ஏழுவகையான கொள்கைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

## பத்து வகைக் குற்றம்

12. **குன்றக் கூறல் மிகைபடக் கூறல்**
**கூறியது கூறல் மாறுகொளக் கூறல்**
**வழூஉச்சொல் புணர்த்தல் மயங்க வைத்தல்**
**வெற்றெனத் தொடுத்தல் மற்றொன்று விரித்தல்**
**சென்று தேய்ந்து இறுதல் நின்றுபயன் இன்மை**
**என்றிவை ஈரைங் குற்றம் நூற்கே.**

1.பொருளை விரித்துக் கூற வேண்டிய இடத்தில் சுருக்கிச் சொல்லுதல். 2. எளிமையாய் விளங்கும் இடத்தில் விவரித்துக் கூறல் 3. கூறியவற்றையே பயனின்றி திரும்பத் திரும்பக் கூறுதல். 4.ஏற்புடையது என ஏற்றுக்கொண்ட ஒன்றைப் பின்னர் மறுத்துக் கூறுதல். 5. குற்றமுடைய சொற்களை இடம்பெறச் செய்தல். 6. இதற்குப் பொருள் இதுவா அதுவா எனத் தடுமாறும்படி கூறுதல் 7. தேவையற்ற கருத்துக்களை இடம் பெறச் செய்தல். 8. சொல்லிக் கொண்டு வந்த செய்தியை பாதியில் விட்டுவிட்டு வேறொரு பொருள் பற்றிப் பேசுதல். 9. சிறப்பாகத் தொடங்கி முடிக்கும் போது சிறப்பின்றி முடித்தல். 10. சொற்கள் இடம்பெற்றிருந்தும் எவ்விதப் பயனும் இன்றி இருத்தல்.



Scanned by CamScanner
Scanned by CamScanner

மேற்கூறிய பத்துக் குற்றங்களையும் அகற்றி குற்றமின்றி கற்கும் வகையில் அமைப்பதே நூலாகும். இவையே நூலில் இடம்பெறக் கூடாத பத்துக் குற்றங்களாக வரையறுக்கப்பட்டுள்ளன.

## பத்து வகை அழகு.

13.சுருங்கச் சொல்லல் விளங்க வைத்தல்
நவின்றோர்க்கு இனிமை நன்மொழி புணர்த்தல்
ஓசை உடைமை ஆழமுடைத்து ஆதல்
முறையின் வைப்பே உலகம் மலையாமை
விழுமியது பயத்தல் விளங்கு உதாரணத்தது
ஆகுதல் நூலிற்கு அழகெனும் பத்தே.

1.சொற்களைத் தேவையில்லாமல் விவரித்துக் கொண்டு போகாமல் சுருக்கமாய்ச் சொல்லுதல். 2. சுருக்கமாய்ச் சொன்னாலும் தெளிவுபடச் சொல்லுதல். 3. கற்பவர்க்கு இன்பம் தரும் சொற்களைக் கூறுதல். 4. குற்றமில்லாச் சொற்களை அமைத்தல். 5. இடத்திற்குத் தகுந்தவாறு சந்த நயம் உடையதாக அமைத்தல். 6. கற்கக் கற்கக் கருத்துக்கள் ஆழமுடையதாக இருத்தல். 7. இயல்கள் அமைப்பு காரணகாரிய முறைப்படி வரிசைப்பட அமைத்தல். 8. முன்னோர் கூற்றிற்கு மாறுபாடு இல்லாமல் கூறல். 9. சிறந்த பொருளை (விழுமிய) வெளிப்படுத்துதல். 10. உதாரணங்களைக் காட்டிப் பொருளை விளங்க வைத்தல்.

மேற்சொன்ன பத்தும் நூலுக்கு இன்றியமையாது பொருந்தி வரக்கூடிய அழகுகள் ஆகும்.

## முப்பத்திரண்டு வகை உத்தி

14. நுதலிப் புகுதல் ஓத்துமுறை வைப்பே
தொகுத்துச் சுட்டல் வகுத்துக் காட்டல்
முடித்துக் காட்டல் முடிவிடங் கூறல்
தானெடுத்து மொழிதல் பிறன்கோள் கூறல்
சொற்பொருள் விரித்தல் தொடர்ச்சொல் புணர்த்தல்
இரட்டுற மொழிதல் ஏதுவின் முடித்தல்



Scanned by CamScanner

Scanned by CamScanner

ஒப்பின் முடித்தல் மாட்டெறிந்து ஒழுகல்
இறந்தது விலக்கல் எதிரது போற்றல்
முன்மொழிந்து கோடல் பின்னது நிறுத்தல்
விகற்பத்தின் முடித்தல் முடிந்தது முடித்தல்
உரைத்தும் என்றல் உரைத்தாம் என்றல்
ஒருதலை துணிதல் எடுத்துக் காட்டல்
எடுத்த மொழியின் எய்த வைத்தல்
இன்னது அல்லது இதுவென மொழிதல்
எஞ்சிய சொல்லின் எய்தக் கூறுதல்
பிறநூல் முடிந்தது தானுடன் படுதல்
தன்குறி வழக்கம் மிகஎடுத்து உரைத்தல்
முடிவின் அப்பொருள் முடித்தல்
ஒன்றினம் முடித்தல் தன்னினம் முடித்தல்
உய்த்துணர வைப்பென உத்தி எண் நான்கே.

1.நூலில் சொல்ல விழையும் பொருள் பற்றிச் சொல்லி பின்னர் நூலுக்குள் செல்லல். 2. இயல்களைக் காரணகாரிய முறைப்படி அமைத்தல். 3. நூலில் கூறும் பல பொருள்களையும் திரட்டி ஓரிடத்தில் சொல்லல்.4. அவ்வாறு திரட்டிச் சொல்லியவற்றை வெவ்வேறாக பகுத்துக் காட்டல். 5. பகுத்துச் சொன்னவற்றை மேலோர் முடித்தவாறு முடித்துக் காட்டல். 6.சொல்லும் இலக்கணத்திற்கு இலக்கியம் தோன்றும் இடத்தைச் சொல்லுதல். 7. முன்னோர் கூற்றுக்களை எடுத்துக் காட்டுதல். 8. தன் நூலில் பிறர் கோட்பாட்டை எடுத்துச் சொல்லுதல். 9. சொல்லினது பொருள் விளங்குமாறு உருபுகளை விரித்து உரைத்தல் (தொகையாக அல்லாமல் தொகா நிலையாகக் கூறல்). 10. ஒன்றிற்கு ஒன்று தொடர்புடைய வாக்கியங்களைத் தொகுத்தல். 11. ஒரு வாக்கியத்தை இரண்டு பொருள்படச் சொல்லுதல். 12. முன்னர்க் காரணம் காட்டாமல் கூறியனவற்றைப் பின்னர்க் காரணம் காட்டி நிறுவுதல். 13.ஒன்றிற்குச் சொல்லப்படும் இலக்கணம் வேறொன்றிற்கும் பொருந்தி வருமாயின் அதற்கு அதுவே இலக்கணமாகக் கூறுதல். 14. ஒன்றிற்கு கூறிய இலக்கணத்தை அதனைப் பெறுவதற்குரிய மற்றொன்றிற்கும் தொடர்புபடுத்திக் காட்டுதல்.



Scanned by CamScanner
Scanned by CamScanner

15. வழக்கு ஒழிந்தவற்றை நீக்குதல் 16. பிற்காலத்து வழங்கி வரும் இலக்கணத்தைக் தழுவிக் கொள்ளுதல் (புதியன போற்றல்) 17. பின்னர் இடந்தோறும் எடுத்துக்கூறும் ஒன்றை முன்னரே சொல்லிக் கொள்ளுதல். 18. ஒரு பொருளுக்கு முன் வைத்தற்குரிய ஒன்றை பொருத்தம் கருதி அதன் பின்னர் வைத்தல் 19.மாறுபாடாக வருவனவற்றை வேறுவேறாக முடித்தல். 20. வேறுவேறாய் முடித்ததை பொது இலக்கணத்தால் தொகுத்துச் சுட்டல். 21. இவ்விதியைப் பின்பு சொல்வோம் எனக் கூறுதல். 22. இவ்விதி முன்னர் சொல்லப்பட்டது என உரைத்தல். 23. மாறுபட்ட இருவரின் கொள்கைகளில் ஒன்றை துணிந்து ஏற்றல். 24. தான் கூறிய இலக்கணத்திற்கு உரிய இலக்கியத்தைத் தானே எடுத்துக் காட்டல் 25. தான் சொல்லும் இலக்கணத்தை தான் எடுத்துக்காட்டிய இலக்கியத்தோடு பொருத்திக் காட்டல். 26. ஐயப்பாடு தோன்றும் இடத்தில் இப்படிப்பட்டது அல்ல இதுவெனத் துணிந்து சொல்லல் 27. சொல்லப்படாதவற்றிற்கு சொல்லியவற்றைக் கொண்டு பொருந்தச் சொல்லல். 28. பிற நூலிலே முடிந்த முடிபைத் தான் ஏற்றுக் கொள்ளல். 29. தான் புதிதாகக் கூறியவற்றை பல இடங்களிலும் எடுத்துச் சொல்லுதல். 30.சொல்முடிந்த இடத்திலேயே அதன் பொருளையும் முடித்துக் காட்டல். 31. விதியால் ஒற்றுமைப்பட்டவைகளை ஒன்றிணைத்துச் சொல்லுதல் அதாவது, ஒன்றைச் சொல்லுமிடத்து அதற்கு இனமாகிய மற்றொன்றையும் அதனோடு முடித்தல். 32. சில விதிகளைக் கொண்டு ஆராய்ந்து அறியும்படியாக ஒரு பொருளை வைத்தல் என உத்தி முப்பத்திரண்டு (எண் நான்கு) வகைப்படும்.

இவை அனைத்தும் நூல் இயற்றும்போது கையாளப்படும் முறைகள் ஆகும்.

**உத்தி** - கையாளும் முறை, தந்திரம்

**யுக்தி** - உத்தி



Scanned by CamScanner

Scanned by CamScanner

## உத்தி - இலக்கணம்

15. நூற்பொருள் வழக்கொடு வாய்ப்பக் காட்டி
ஏற்புழி அறிந்து இதற்கு இவ்வகையாம் எனத்
தகும்வகை செலுத்துதல் தந்திர உத்தி.

ஒரு இலக்கண நூலால் அறிவிக்கப்படும் பொருள் உலக வழக்கோடும் செய்யுள் வழக்கோடும் பொருந்தக் காட்டி, அப்பொருள் மற்றொரு நூலில் பொருந்தி வரும் இடம் அறிந்து, இவ்விடத்தில் இன்னவகையில் பொருந்தும் என நினைத்து தக்கபடி அமைத்துக் காட்டுவது தந்திர உத்தியாகும்.

## நூலின் உறுப்புக்கள்

ஓத்து என்பது

16. நேரின மணியை நிரல்பட வைத்தாங்கு
ஓரினப் பொருளை ஒருவழி வைப்பது
ஓத்தென மொழிப உயர்மொழிப் புலவர்

ஒரு சாதியாய் உள்ள மணிகளை வரிசையாகப் பதித்தாற்போல ஒரு சாதியாய் உள்ள பொருள்களை ஒன்றுபடச் சொல்லுவது ஓத்து என்னும் உறுப்பாகும் என்று உயர்மொழிப் புலவர் கூறுவர்.

ஓரினப் பொருள் பற்றிப் பேசுவதென்பது எழுத்தியலில் எழுத்துக்களைப் பற்றியும் பதவியலில் எழுத்துக்கள் இணைந்து சொற்களாவதையும் புணரியலில் எழுத்துக்களின் புணர்ச்சி பற்றியும் என ஓரினப் பொருள் பற்றிப் பேசினமையைக் காண்க.

## படலம்

17. ஒருநெறி இன்றி விரவிய பொருளால்
பொதுமொழி தொடரின் அது படலம் ஆகும்.

ஒருமொழியாய் அமையாது கலந்த பொது மொழியால் அஃதாவது பல்வகைப் பொருளால் கலப்புற்று அமைந்தவற்றைத் தொகுத்து அமைப்பது படலமாகும். இனப்பொருள்கள் தனித்தனியாக அமைந்த இயல்களை இணைத்தல் படலமாகும்.

## சூத்திரம்

18. சில்வகை எழுத்தில் பல்வகைப் பொருளைச்
செவ்வன் ஆடியில் செறித்துஇனிது விளக்கித்
திட்ப நுட்பம் சிறந்தன சூத்திரம்



Scanned by CamScanner

Scanned by CamScanner

மிகப் பெரிய பொருளின் வடிவையும் தன்னுள் அடக்கித் தெளிவாகவும் இனிதாகவும் காட்டுவது சிறிய கண்ணாடியின் இயல்பாகும். அதுபோன்று சில எழுத்துக்களால் அமைந்து பல வகைப்பட்ட பொருள்களையும் தன்னுள் அடக்கி இனிமையும் தெளிவும் திண்மையும் நுண்மையும் புலப்படக் காட்டுவது சூத்திரம் ஆகும்.

சூத்திரம் சில எழுத்துக்களால் அமைந்த செய்யுள் நடையில் இருக்கும் நூற்பா. அதாவது, இலக்கண நூலில் உள்ள பாடலைக் குறிக்கும். விரிவாகச் சொல்ல வேண்டிய பொருளைச் சுருக்கித் தன்னுள்ளே கொண்டிருக்கும். ஆகவே தான் செவ்வென் ஆடி உதாரணமாகக் காட்டப்பட்டுள்ளது.

**சூத்திரத்தின் இயல்பு**

**19. ஆற்றொழுக்கு அரிமா நோக்கம் தவளைப்**
**பாய்த்துப் பருந்தின்வீழ்வு அன்னசூத் திரநிலை.**

ஆற்றொழுக்கு, அரிமா நோக்கு, தவளைப் பாய்த்து, பருந்தின் வீழ்வு இந்நான்கும் சூத்திரன் இயல்பிற்கு எடுத்துக்காட்டப்பெறும் உவமைகளாகும்.

**சூத்திர வகை**

**20.பிண்டம் தொகைவகை குறியே செய்கை**
**கொண்டுஇயல் புறனடைக் கூற்றன சூத்திரம்.**

1.பிண்டச் சூத்திரம், 2. தொகைச் சூத்திரம், 3. வகைச் சூத்திரம், 4. குறிச் சூத்திரம், 5. செய்கைச் சூத்திரம், 6. புறனடைச் சூத்திரம் என சூத்திரம் ஆறு வகைப்படும்.

பிண்டச் சூத்திரம் - பல வகைப்பட்ட பொருள்களையும் உள்ளடக்கிக் கூறுதல்

தொகைச் சூத்திரம் - அப்பல வகைப்பட்ட பொருள்களையும் வேறுவேறாக தொகுத்துச் சொல்லல்.

வகைச் சூத்திரம் – தொகுத்துச் சொல்லப்பட்டவைகளை வேறு வேறாக வகுத்துச் சொல்லல்.

குறிச் சூத்திரம் – இவை இன்னவை எனக் கூறல் அஃதாவது இவை உயிர், இவை மெய், இவை பெயர், இவை வினை ஆகிய சூத்திரங்கள் போல்வன.செய்கைச் சூத்திரம் – புணர்ச்சி விதியறிந்து



Scanned by CamScanner

Scanned by CamScanner

புணர்தலைச் செய்தலும் முடிபு விதியறிந்து முடித்தலைச் செய்தலும் ஆகும். புறனடைச் சூத்திரம் - கூறப்பட்ட இலக்கணங்களுக்குப் புறத்தே அடையாகி நிற்றல். குறிச் சூத்திரம், செய்கைச் சூத்திரம், ஆகிய இரண்டனுள் மற்றவை நான்கும் அடங்கும்.

## உரைவகை

21. பாடம் கருத்தே சொல்வகை சொற்பொருள்
தொகுத்துரை உதாரணம் வினாவிடை விசேடம்
விரிவு அதிகாரம் துணிவு பயனோடு
ஆசிரிய வசனம் என்றுஈரேழ் உரையே

1. மூலபாடத்தை எடுத்துரைத்தல், 2.கருத்துரை கூறல், 3. சொல் வகை கூறல், 4. சொற்பொருள் உரைத்தல், 5. கருத்தைத் தொகுத்து பொழிப்புரையாகத் தருதல், 6. எடுத்துக் காட்டு தருதல், 7. ஐயங்களைத் தோற்றுவித்தல், 8. அவற்றிற்கான விடைகளைக் கூறுதல், 9. நூல் தரும் பொருளன்றி இடத்திற்குத் தகுந்தாற்போல சிறப்புப் பொருளைக் காட்டல், 10. விரித்துக் கூறவேண்டிய இடத்து விளக்கமாகக் கூறல், 11. அதிகாரத்தோடு பொருந்த உரைத்தல், 12. சந்தேகித்து நின்றவிடத்து இதற்கு இதுவே பொருளென துணிந்து உரைத்தல், 13. இப்படிச் சொல்லியதனால் வந்த பயன் இது என உரைத்தல் 14. உரையிடத்து பழமையான ஆசிரியர்களின் பாடங்களைப் பொருத்திக் காட்டுதலும் ஆகிய பதினான்கு வகையாலும் உரைக்கப்படும் உரை.

## காண்டிகை உரையின் இலக்கணம்

21. கருத்துப் பதப்பொருள் காட்டு மூன்றினும்
அவற்றொடு வினா விடைஆக்க லானும்
சூத்திரத்து உட்பொருள் தோற்றுவ காண்டிகை.

1.கருத்துரை கூறுதல் 2. பதப்பொருள் கூறுதல் 3. எடுத்துக்காட்டால் நிறுவுதல் ஆகிய மூன்றனைச் சொல்லுதல். அவற்றுடன் 4. வினா எழுப்புதல் 5. விடை கூறி விளக்குதல் ஆகிய இரண்டையும் கூட்டி ஐந்தால் சூத்திரத்தின் பொருளை விளக்குவது காண்டிகை ஆகும்.



Scanned by CamScanner
Scanned by CamScanner

## விருத்தியுரை

23. சூத்திரத்து உட்பொருள் அன்றியும் ஆண்டைக்கு
இன்றி யமையா யாவையும் விளங்கத்
தன்னுரை யானும் பிற நூலானும்
ஐயம் அகல ஐங்காண்டிகை உறுப்பொடு
மெய்யினை எஞ்சா து இசைப்பது விருத்தி.

சூத்திரத்துப் பொருளை விளக்குதல் மட்டுமல்லாது அவ்விடத்திற்குத் தேவையான பொருள்களைத் தன் உரையாலும் பிற நூலானும் ஐயம் நீங்கத் தெளிவுபடுத்துதல். மேற்சொல்லப்பட்ட ஐந்து காண்டிகை உறுப்போடு ஐயம் அகல உண்மைப் பொருளைத் தெளிவுபட விரிவாக எடுத்துரைத்தல். ஆகிய தன்மைகள் அனைத்தையும் உடையது விருத்தியுரையாகும்.

## நூல் என்னும் பெயர்க்காரணம்

24. பஞ்சிதன் சொல்லாப் பனுவல் இழையாகச்
செஞ்சொற் புலவனே சேயிழையா - எஞ்சாத
கையே வாயாகக் கதிரே மதியாக
மையிலா நூல்முடியு மாறு.

தன் சொற்கள் பஞ்சாகவும், செய்யுள் இழையாகவும் சொற்களை நன்கறிந்த புலவன் நூற்கின்ற பெண்ணாகவும் குறையாத வாய் கையாகவும் அறிவு கதிராகவும் கொண்டு குற்றமில்லாத கல்விநூல் ஆக்கப்படுகிறது.

நூல் - உவமை ஆகுபெயர்

| உவமிக்கப்படும் பொருள் | - | உவமப் பொருள் |
|---|---|---|
| சொல் | - | பஞ்சு |
| செய்யுள் | - | இழை |
| புலவன் | - | பெண் |
| வாய் | - | கை |
| அறிவு | - | கதிர் (இராட்டை) |



Scanned by CamScanner
Scanned by CamScanner

ஒரு பெண் தன் கையினால் இராட்டையாகிய கருவியைக் கொண்டு பஞ்சினை இழைத்து நூலாக்குவதைப் போல, புலவன் தன் வாயினால் அறிவாகிய கருவியைக் கொண்டு சொற்களால் செய்யுள் இயற்றி நூலாக்குகிறான்.

**கற்கும் நூலின் மாண்பு**

**25. உரத்தின் வளம்பெருக்கி உள்ளிய தீமைப்**
**புரத்தின் வளமுருக்கிப் பொல்லா மரத்தின்**
**கனக்கோட்டம் தீர்க்கும் நூல் அஃதேபோல் மாந்தர்**
**மனக்கோட்டம் தீர்க்கும் நூல் மாண்பு.**

உடம்பின் உள் இருக்கின்ற ஞானமாகிய அறிவை வளர்த்து, உள்ளத்தில் நினைக்கப்பட்ட தீமையாகிய அஞ்ஞான வளத்தைக் கெடுத்து, வளைந்த மரத்தினது கோணலைப் போக்குகின்ற எற்று நூலைப் போல மனிதருடைய மனத்தினது கோணலைப் போக்குவது நூலின் மாண்பாகும்.

எற்று நூல் – மரம் அறுக்க நேர்மை காட்டும் நூல் வளைந்த மரத்தின் கோணலைப் போக்கி நேராக்குவது எற்று நூல். அதுபோல் மனிதரின் மனக்கோனலை நீக்குவது கல்வி நூல்.

## ஆசிரியரின் இலக்கணம்

**26. குலன்அருள் தெய்வம் கொள்கை மேன்மை**
**கலைபயில் தெளிவு கட்டுரை வன்மை**
**நிலம் மலை நிறைகோல் மலர்நிகர் மாட்சியும்**
**உலகியல் அறிவோடு உயர்குணம் இனையவும்**
**அமைபவன் நூலுரை ஆசிரி யன்னே.**

நற்குடிப் பிறப்பு, இரக்க உணர்வு, கடவுள் வழிபாடு, சிறந்த ஒழுக்கத்தினால் வரும் மேன்மை, பல நூல்களைக் கற்றுத் தேர்ந்த அறிவு, நூல் பொருளை எடுத்துச் சொல்லும் திறன், நிலம், மலை, துலாக்கோல், மலர் ஆகியவற்றை ஒத்த குணங்களும் உலக நடைமுறையை அறிந்து கொள்ளும் அறிவு (காலத்திற்கேற்ப சிந்திக்கும் ஆற்றல்) இவை போன்ற பிற உயர்வான குணங்களும்



Scanned by CamScanner
Scanned by CamScanner

நிரம்பப் பெற்றவன் நூலைக் கற்பிக்கும் ஆசிரியன் ஆவான்.

**நிலத்தின் பெருமை**

**27. தெரிவரும் பெருமையும் திண்மையும் பொறையும்**
**பருவ முயற்சி அளவிற் பயத்தலும்**
**மருவிய நன்னில மாண்பா கும்மே.**

1.பிறரால் அறியமுடியாத அளவிற்கு உருவத்தில் பெருமை. 2 எவ்வளவு சுமையை ஏற்றினாலும் கலங்காத வலிமை 3. தன்னை பிறர் வெட்டினாலும் தோண்டினாலும் பொறுத்துக்கொள்ளும் பொறுமை 4. உழவர் செய்யும் முயற்சியின் அளவிற்குத்தக்க பயனைத் தருதல். இவை நான்கும் நல்ல நிலத்தின் இடத்தில்பொருந்திய குணங்கள் ஆகும்.

1. பிறரால் அறிய முடியாத அளவிற்கு கல்வியில் பெருமை 2 எத்தகைய கல்வியறிவுடையவராயினும் வாதம் செய்து தன்னை நெருங்கினால் கலங்காத வலிமை 3. மாணாக்கர் இகழ்தல் முதலிய குற்றங்களைச் செய்தாலும் பொறுத்துக்கொள்ளும் பொறுமை 4. பருவத்தில் மாணாக்கர் செய்யும் முயற்சியின் அளவிற்கேற்ப அவர்களுக்குப் பயனைத் தருதல்.

மேற்கூறிய நான்கு குணங்களும் ஆசிரியரிடத்தும் பொருந்திய குணங்கள் ஆதலால் நிலம் ஆசிரியர்க்கு உவமையாயிற்று.

**மலையின் பெருமை**

**28. அளக்கல் ஆகா அளவும் பொருளும்**
**துளக்கல் ஆகா நிலையும் தோற்றமும்**
**வறப்பினும் வளந்தரும் வண்மையும் மலைக்கே.**

1.அளவிட முடியாத வடிவத்தின் அளவும். 2. அளவிட முடியாத அளவிற்குப் பல வகைப் பொருட்களைக் கொண்டிருத்தலும். 3 எப்படிப்பட்ட வலிமை உடையவராலும் அசைக்க முடியாத உருவத்தின் நிலையும். 4. நெடுந்தூரத்தில் உள்ளவரும் காணக்கூடிய உயர்ச்சியும். 5. மழை பெய்யாது வறண்ட காலத்திலும் தன்னைச் சேர்ந்த உயிரினங்களுக்கு நீர் வளத்தைக் கொடுக்கும் கொடையும் மலையின் குணங்களாகும்.



Scanned by CamScanner
Scanned by CamScanner

1.அளவிட முடியாத அளவிற்கு கல்வியின் அளவு 2. அளவிட முடியாத அளவிற்கு பல வகை நூற்பொருள்களைத் கற்றுத் தெரிந்த புலமை 3. எப்படிப்பட்ட புலமை வாய்ந்தவராலும் அசைக்க முடியாத கல்வி அறிவின் நிலை 4. நெடுந்தொலைவில் உள்ளோராலும் அறியப்படும் உணர்ச்சி 5. தன்னைச் சேர்ந்த மாணவர்களுக்கு கல்வி அறிவைக் கொடுக்கும் கொடை. இவ் ஐந்து நற்பண்புகளும் ஆசிரியர்க்கு உள்ளமையால் மலை ஆசிரியருக்கு உவமை ஆயிற்று.

**நிறைகோலின் மாண்பு**

**29. ஐயம் தீரப் பொருளை உணர்த்தும்**
**மெய்ந்நடு நிலையும் மிகுநிறை கோற்கே**

1. சந்தேகத்திற்கு இடமின்றி நிறுக்கப்பட்ட பொருளின் அளவைக் காட்டலும் 2. இரண்டு தட்டுகளுக்கும் நடுவே உண்மை தோன்ற நிற்றலும் தராசின் குணங்கள் ஆகும்.

1. வினவப்பட்ட பொருள்களுக்கு சந்தேகம் தீர விடையளித்தலும் (ஐயம் தீரக் கற்றுத் தரல்) 2. எவர் பக்கமும் சாயாது நடுவு நிலமையோடு நிற்றல் ஆசிரியர்க்குரிய குணங்களாகும்.

தராசுக்குரிய குணங்கள் பொருந்தி இருத்தலில் ஆசிரியர்க்கு நிறைகோல் உவமையாயிற்று.

**மலரின் மாண்பு**

**30. மங்கலம் ஆகி இன்றி யமையாது**
**யாவரும் மகிழ்ந்து மேற்கொள மெல்கிப்**
**பொழுதின் முகமலர் உடையது பூவே.**

1. சுப காரியங்களுக்கு உரியது 2. தானின்றி எக்காரியமும் நடைபெறாது எனும் சிறப்புடையது 3. எல்லோரும் விரும்பிச் சூடிக் கொள்ளும் இயல்புடையது. 4. மலர்தற்கு உரிய காலத்தில் மலர்தலும் பூவிற்குரிய குணங்களாகும்.

1. நன்மையான செயல்களுக்கு உரியவராகி இருத்தல்.
2. சிறப்பிக்கும் எச்செயலும் தான் இன்றி நடைபெறாமை



Scanned by CamScanner
Scanned by CamScanner

3. அனைவரும் விரும்பும் குணம் உடையவர். 4. முகமலர்ச்சியோடு பாடம் சொல்லுதற்கு உரியவர் ஆசிரியர் ஆகையால்தான் (பூ) மலர் ஆசிரியர்க்கு உவமையாயிற்று.

## ஆசிரியர் ஆகாதவரின் தன்மை

**31. மொழிகுணம் இன்மையும் இழிகுண இயல்பும்**
**அழுக்காறு அவாவஞ்சம் அச்சம் ஆடலும்**
**கழற்குடம் மடற்பனை பருத்திக் குண்டிகை**
**முடத்தெங்கு ஒப்பென முரண்கொள் சிந்தையும்**
**உடையோர் இலர் ஆசிரியர் ஆகுதலே.**

1. பாடம் சொல்லும் குணம் இல்லாமை 2. இழிந்த குணங்களை இயல்பாகக் கொண்டிருத்தல் 3. பிறரைக் கண்டு பொறாமை கொள்ளல் 4. பொருளின் மேல் வரும் ஆசை (பேராசை) 5. உண்மைப் பொருளை மறைத்து பொய்ப்பொருள் காட்டி வஞ்சித்தல் 6. மாணவர்களைக் கண்டு அஞ்சுதல் 7. கழற்குடம், மடற்பனை, பருத்திக் குண்டிகை, முடத்தெங்கு போன்று மாறுப்பட்ட சிந்தனை உடையவராய் இருத்தல் ஆகியவை ஆசிரியர் ஆகாதவர்க்குரிய இயல்புகளாகும்.

### கழற்குடம்

**32. பெய்தமுறை அன்றிப் பிறழ உடன்தரும்**
**செய்தி கழல்பெய் குடத்தின் சீரே.**

1. குடத்தில் போட்ட காய்களை முறை மாற்றி முன் இட்டதைப் பின்னும் பின் இட்டதை முன்னும் தருவது. பெய்த காய்களை விரைவில் வெளியில் தள்ளல் ஆகியவை கழற்காய் போட்ட குடத்தின் குணங்களாகும்.

1. முன் கூற வேண்டியதைப் பின்னும் பின் கூற வேண்டியதை முன்னும் முறை மாற்றிக் கற்பித்தல் 2. மாணவர்கள் மனதில் இருத்திக் கொள்ள முடியாத வகையில் நூல் பொருளை விரைந்து சொல்லுதல் இக்குணமுடையோர் ஆசிரியர் ஆகாதவர் ஆவர்.



Scanned by CamScanner

Scanned by CamScanner

**33. தானே தரக்கொளின் அன்றித் தன்பால்**

**மேவிக் கொளக்கொடா இடத்தது மடற்பனை.**

தானே தன்னிடத்தில் உள்ள பழங்களைத் தந்தால் ஒழிய பிறர் ஏறிப் பறித்துக்கொள்ள இடம் தராது. அதுபோல தாமே தம்மிடத்தில் உள்ள நூல் பொருள்களைச் சொல்ல அறிந்து கொள்ள முடியுமே தவிர, மாணவர்கள் நெருங்கி வந்து கற்றுக் கொள்ள இடம் தராதவர்கள் ஆசிரியர் ஆகாதவர்கள் ஆவர்.

மடற்பனை - ஏற முடியாத அளவிற்கு விரிந்த விரிந்த மடல்களை உடையது.

## பருத்திக் குண்டிகை

**34. அரிதில் பெயக்கொண்டு அப்பொருள் தான்பிறர்க்கு**

**எளிது ஈவில்லது பருத்திக் குண்டிக்க.**

பஞ்சை உட்கொள்ளும் போது சிறிது சிறிதாக ஏற்றுக்கொள்ளும். கொடுக்கும் போதும் எளிதில் தராது சிறிது சிறிதாக எடுக்க இடம் தரும். அதுபோல, கல்வியைக் கற்ற காலத்திலும் வருந்தி சிறிது சிறிதாகவே கற்று தம்முள் கொண்டிருப்பர். பாடம் சொல்லிக் கொடுக்கும் போதும் மிகவும் வருந்தி எளிதில் கற்றுக் கொடுக்காது சிறிது சிறிதாக கற்றுக் கொடுப்பர். இப்பண்புடையோரும் ஆசிரியர் ஆகாதவரே ஆவர்.

பருத்திக்குண்டிகை – பஞ்சை அடைத்துவைத்த குடம்.

## முடத்தெங்கு

**35. பல்வகை உதவி வழிபடு பண்பின்**

**அல்லோர்க்கு அளிக்கும் அதுமுடத் தெங்கே.**

நீர்ப்பாய்ச்சி உரமிட்டு பல உதவிகளையும் செய்து வளர்ப்பவருக்குப் பயன்படாது அடுத்தவருக்குப் பயன்களைத் தரவல்லது முடத்தெங்கு. அதுபோல, பொருள் கொடுத்து பல உபகாரங்களையும் செய்து வழிபாடு செய்பவர்களுக்குக் கற்றுக் கொடுக்காது, பிறருக்குக் கற்றுக் கொடுப்பவர் ஆசிரியர் ஆகாதவர் ஆவர்.



Scanned by CamScanner

Scanned by CamScanner

முடத்தெங்கு வேலிக்கு அப்பால் வளைந்து நிற்கும் தென்னை மரம். இம்மரம் தன்னிடத்திலுள்ள காய்களை தன்னை வளர்த்தவனுக்குக் கொடுக்காது பிறருக்குத் தரும் இயல்புடையது.

## ஆசிரியர் பாடம் சொல்லும் முறை

36. ஈதல் இயல்பே இயம்பும் காலைக்
காலமும் இடனும் வாலிதின் நோக்கிச்
சிறந்துழி இருந்து தன் தெய்வம் வாழ்த்தி
உரைக்கப்படும் பொருள் உள்ளத்து அமைத்து
விரையான் வெகுளான் விரும்பி முகமலர்ந்து
கொள்வோன் கொள்வகை அறிந்தவன் உளங்கொளக்
கோட்டமில் மனத்தில் நூல் கொடுத்தல் என்ப.

பாடம் சொல்லிக் கொடுக்கும் வரலாற்றைச் சொல்லும்போது நல்ல இடத்தையும் உரிய காலத்தையும் தேர்ந்தெடுத்தல் 2. மாணவர்கள் அனைவரும் தன்னைக் காணும்படியாக சிறந்த இடத்தில் இருந்து 3. தான் வழிபடும். கடவுளைத் துதித்து 4. தான் கற்பிக்கப் போகும் பாடம் பற்றிய பொருளினை மனத்தில் நிறைத்து 5. விரைந்து சொல்லாமல் பொறுமையுடனும் 6. சினம் சொள்ளாமலு 7. விரும்பி முகம் மலர்ந்து 8. பாடம் கேட்கும் மாணவனது மனநிலை அறிந்து 9. அவனது மனம் ஏற்றுக்கொள்ளும் வகையில் 10. மாறுபாடில்லா மனத்துடன் நூலைக் கற்றுக் கொடுத்தல் வேண்டு என்று சொல்லுவர் புலவர்.

## மாணாக்கர்

37. தன்மகன் ஆசான் மகனே மன்மகன்
பொருள்நனி கொடுப்போன் வழிபடு வோனே
உரைகோளா ளற்கு உரைப்பது நூலே.

1. தன்மகன் 2. தன் ஆசான் மகன் 3. அரசன் மகன் 4. மிகுந்த பொருளைக் கொடுப்பவன் 5. தன்னை வழிபடுபவன் 6. தான் கூறும் பாடத்தை விரைந்து ஏற்றுக்கொள்ளும் அறிவுடையவன் ஆகியோர்க்கு ஆசிரியர் கற்றுக் கொடுப்பர்.



Scanned by CamScanner
Scanned by CamScanner

## மாணாக்கர் இலக்கணம்

38. அன்னம் ஆவே மண்ணொடு கிளியே
இல்லிக் குடம் ஆடு எருமை நெய்யரி
அன்னர் தலை இடை கடை மாணாக்கர்.

அன்னத்தையும் பசுவையும் போன்றோர் தலை மாணாக்கர். மண்ணையும் கிளியையும் போன்றோர் இடை மாணாக்கர். இல்லிக்குடம், ஆடு, எருமை, நெய்யரி போன்றோர் கடை மாணாக்கர் ஆவர்.

இல்லிக்குடம் – ஓட்டைக்குடம்

நெய்யரி – கசடு மட்டும் தங்கியிருக்கும் பன்னாடை.

**தலை மாணாக்கர்**

அன்னம் : பாலையும் நீரையும் கலந்து வைப்பின் பாலை மட்டும் உண்ணும் (நீரையும் பாலையும் வேறு வேறாய்ப் பிரித்தெடுக்கும்)

அன்னத்தைப் போல ஆசிரியர் கூறியதிலிருந்து தேவையானவற்றை மட்டும் எடுத்துக்கொள்ளுதல்.

பசு : மிகுந்த புல்லிருக்கும் இடத்தைக் கண்டால் அப்புல்லை வயிறு நிறைய மேய்ந்த பின்பு ஓரிடத்தில் படுத்துக் கொண்டு தின்றவற்றை அசை போடும்.

ஆசிரியர் கற்றுக் கொடுத்ததை மீண்டும் மீண்டும் நினைவில் கொண்டு வந்து சிந்தித்தல் எனவே இவ்விரண்டும் தலை மாணாக்கருக்கு உதாரணமாயிற்று.

**இடை மாணாக்கர்**

மண் : உழவர் வருந்தி முயற்சி செய்த அளவிற்கு விளைச்சலைக் கொடுக்கும். உழுதல், களை பறித்தல் முதலான) ஆசிரியர் வருந்தி வருந்திக் கற்பிக்கும் முயற்சியின் அளவைப் பொறுத்து மாணவர்தம் அறிவைக் காட்டுவர்.



Scanned by CamScanner
Scanned by CamScanner

கிளி : தனக்குச் சொல்லிக்கொடுத்த சொல்லை மட்டுமே சொல்லும் வேறு எதையும் சொல்லாது.(சொன்னதைச் சொல்லுமாம்

கிளிப்பிள்ளை என்ற பழமொழியை நோக்குக) ஆசிரிய தனக்குக் கற்றுக்கொடுத்த பொருள் தவிர வேறு நூல் பொருளை அறிந்து கொள்ள முயற்சி செய்யாமை. எனவே இவை இரண்டு இடை மாணாக்கருக்கு உதாரணம் ஆயிற்று.

**கடை மாணாக்கர்**

1. இல்லிக்குடம் : நீரை ஊற்றும் தோறும் ஒழுகவிடுதல்.

ஆசிரியர் கற்றுக்கொடுக்கும் தோறும் மறந்து விடுதல்.

2. ஆடு : நின்று மேயாது நுனிப்புல் மேய்ந்து வயிறையும் நிறைத்துக் கொள்ளாது.

ஓர் ஆசிரியரிடம் மிகுந்த கல்விப் புலமை இருப்பினும் அவரிட முழுமையாகக் கற்காது பல ஆசிரியரிடமும் கற்று முழுமையில்லா அறிவுடன் இருப்பர்.

3. எருமை : எருமை குளத்து நீரை கலக்கிக் குடிக்கும் அதுபோல ஆசிரியரின் உள்ளத்தை வருந்தச் செய்து கற்பர்.

4. நெய்யரி : தேனடையில் இருந்தாலும் தேனைச் சேமிக்காது கசடையே தன்னிடத்தில் தேக்கிக் கொள்ளு

நல்லதைவிடுத்து கெட்டவற்றையே மனதில் நிறுத்திக் கொள்வோ இத்தகைய இயல்புடையோரெல்லாம் கடை மாணாக்கர் ஆவர்.

**மாணாக்கர் ஆகாதவர்**

39. களிமடி மானி காமி கள்வன்
பிணியன் ஏழை பிணக்கன் சினத்தன்
துயில்வோன் மந்தன் தொன்னூற்கு அஞ்சித்
தடுமாறு உளத்தன் தறுகணன் பாவி
படிறன் இன்னோர்க்குப் பகரார் நூலே.



Scanned by CamScanner
Scanned by CamScanner

கள்ளுண்டு களிப்பவன், சோம்பேறி, அகங்காரம் உடையவன், காமமுடையவன் (காமுகன்), திருடன், நோயாளி, அறிவில்லாதவன், மாறுபாடு ( முரண்பாடு) உடையவன், கோபம் உடையவன், மிகத் தூங்குவோன், மதி நுட்பம் இல்லாதவன், பழைய நூல்களைக் கண்டு அஞ்சும் தடுமாறு உள்ளத்தை உடையவன், அஞ்சத் தக்கவைகளைக் கண்டு அஞ்சாதவன், பாவஞ் செய்வோன், பொய் பேசுவோன் இப்படிப்பட்ட குற்றத்தை உடையவர்களுக்கு நூலைக் கற்றுக்கொடுக்கமாட்டார் ஆசிரியர்.

**மாணாக்கர் பாடம் கேட்கும் முறை**

**40. கோடல் மரபே கூறுங் காலைப்**
**பொழுதொடு சென்று வழிபடல் முனியான்**
**குணத்தொடு பழகிஅவன் குறிப்பிற் சார்ந்து**
**இருஎன இருந்து சொல்எனச் சொல்லிப்**
**பருகுவன் அன்ன ஆர்வத்தன் ஆகிச்**
**சித்திரப் பார்வையின் அத்தக அடங்கிச்**
**செவிவா யாக நெஞ்சுகளன் ஆகக்**
**கேட்டவை கேட்டவை விடாது உளத்து அமைத்துப்**
**போஎனப் போதல் என்மனார் புலவர்.**

பாடங் கேட்கும் வரலாற்றைச் சொல்லும் போது, தக்க காலத்தில் சென்று வெறுப்பு இல்லாமல் விருப்பமுடன் ஆசிரியரை வழிபாடு செய்து, ஆசிரியர் குணம் அறிந்து பழகி, அவரின் குறிப்பறிந்து செயல்பட்டு இரு என்று சொன்னபிறகு இருந்து, முன் கேட்ட பாடங்களைச் சொல் என்றதும் சொல்லி, தாகத்தில் இருப்பவன் நீரை விரும்பிப் பருகுவதைப் போல, பாடம் கேட்டலில் ஆசையுடையவனாகி, சித்திரப் பாவைபோல் அசைவற்ற குணத்தினோடு அடக்கமாய் இருந்து, செவி வாயாகவும் மனமானது கொள்ளும் களமாகவும் கேட்டவற்றை மீண்டும் உள்ளத்தில் இருத்தி, ஆசிரியர் போ என்று சொன்ன பிறகு எழுந்து போதல் வேண்டும் என்று சொல்லுவர் புலவர்.



Scanned by CamScanner
Scanned by CamScanner

செவி வாயாக நெஞ்சு களனாகி - உணவுக் கவலத்தை வா
வழியாக அனுப்பி கொள்களமாகிய வயிறு நிரப்பப்படுதல் போல செ
வாயிலாக கருத்தை அனுப்பி கொள்களமாகிய மனம் நிரப்பப்படுதல்

## நூலைப் பயிலும் முறை

41. நூல்பயில் இயல்பே நுவலின் வழக்கறிதல்
பாடம் போற்றல் கேட்டவை நினைத்தல்
ஆசான் சார்ந்தவை அமைவரக் கேட்டல்
அம்மாண்பு உடையோர் தம்மொடு பயிறல்
வினாதல் வினாயவை விடுத்தல் என்றிவைக்
கடனாக் கொளினே மடம்நனி இகக்கும்.

நூல் கற்றலின் இயல்பைச் சொல்லின் 1.உலக வழக்கைய செய்யுள் வழக்கையும் ஆராய்ந்து அறிதல். 2.மூலபாடங்கள மறவாது போற்றிப் பாதுகாத்தல்.3.தான் கேட்ட பாடப் பொருளை பலகாலும் சிந்தித்தல். 4.ஆசிரியரிடம் சென்று தன் மனது பதியும்படி மீண்டும் கேட்டல். 5.பாடப்பொருளைப் பற்றியே பேசு மாண்புடைய மாணவருடன் சேர்ந்து படித்தல். 6.ஐயத்தை பிறரி கூறித்தெளிவு பெறுதல்.7.பிறருடைய ஐயத்தைத் தா தெளிவுபடுத்துதல். இச்செயல்களை எல்லாம் முறையாக மாணவ கடைப்பிடித்தால் அறியாமை அவனை விட்டு மிகுதியாய் நீங்கி போய்விடும்.

**மீண்டும் மீண்டும் படித்தல்**

42.ஒருகுறி கேட்போன் இருகால் கேட்பின்
பெருக நூலில் பிழை பாடிலனே.

ஒருமுறை பாடங்கேட்டவன் அப்பாடத்தை இரண்டு முறை கேட்பானாயின் அந்நூலைப் பிழையின்றித் தெரிந்து கொள்வான்.

43.முக்கால் கேட்பின் முறையறிந்து உரைக்கும்.

மூன்றுமுறை கேட்பானாயின் ஆசிரியர் கற்பிக்கும் முறை தெரிந்து பிறருக்கு எடுத்துச் சொல்லுவான்.



Scanned by CamScanner

Scanned by CamScanner

44. ஆசான் உரைத்தது அமைவரக் கொளினும்
காற்கூறு அல்லது பற்றலன் ஆகும்.

ஆசிரியன் கற்பித்த நூற்பொருளை தான் அறிவோடு பொருந்தக் கற்றாலும் ஆசிரியரின் அறிவுத்திறத்தில் கால்பங்கே அவனுக்கு வந்து சேரும்.

45.அவ்வினை யாளரொடு பயில்வகை ஒருகால்
செவ்விதின் உரைப்ப அவ்விரு காலும்
மையறு புலமை மாண்புடைத்து ஆகும்.

தன்னோடு பயிலும் மாணாக்கர்களோடு கலந்துரையாடி பழகும் போது கால் பங்கு அறிவு பெறுவான்.தன்னுடன் பயில்வோருக்கும் சபையோருக்கும் விரித்துரைக்கிறபோது அரைப்பங்கு அறிவினைப் பெறுவான்.

பாடம் கேட்கும் போது – கால்பங்கு
மாணவர்களோடு பழகும் போது – கால் பங்கு
எடுத்துரைக்கும் போது – அரைப்பங்கு
என குற்ற மற்ற முழுப் புலமையையும் நிரம்பப் பெறுகிறான்.

46.அழலின் நீங்கான் அணுகான் அஞ்சி
நிழலின் நீங்கான் நிறைந்த நெஞ்சமொடு
எத்திறத்து ஆசான் உவக்கும் அத்திறம்
அறத்தின் திரியாப் படர்ச்சி வழிபாடே.

குளிர்காய்கிறவன் நெருப்பை விட்டு நீங்காமலும் நெருங்காமலும் இருக்கின்றதைப் போன்று, ஆசிரியரை விட்டு விலகாமலும் நெருங்காமலும் இருக்க வேண்டும்.விடாது பின் செல்லும் நிழலைப் போல ஆசிரியரைப் பின்தொடர்ந்து மாணவன் செல்ல வேண்டும். எத்திறத்தில் இருந்தால் ஆசிரியன் மகிழ்வானோ அத்தன்மையோடு பொருந்தி அறத்தின் பாற்பட்ட செயல்களைச் செய்து நிற்க வேண்டும்.இவையே ஆசிரியருடன் மாணவன் பழகும் முறையாகும்.



Scanned by CamScanner
Scanned by CamScanner

## சிறப்புப் பாயிரத்தின் இலக்கணம்

**47.ஆக்கியோன் பெயரே வழியே எல்லை.**
**நூற்பெயர் யாப்பே நுதலிய பொருளே**
**கேட்போர் பயனோடு ஆயெண் பொருளும்**
**வாய்ப்பக் காட்டல் பாயிரத்து இயல்பே.**

1.நூலை இயற்றியவன் பெயர், 2.நூலின் வழி, 3.நூ வழங்கப்படக்கூடிய நாட்டடின் எல்லைகள், 4.நூலின் பெ 5.தொகை, வகை, விரி ஆகிய யாப்பினுள் ஒன்றாக அமைந் 6.நூல் கூறும் பொருள், 7.நூலைக் கேட்பதற்கு உரியவர்8.நூலை கேட்பதால் உண்டாகும் பயன் ஆகிய கூறுகளைப் பொருந் காட்டுவதே சிறப்புப்பாயிரத்தின் இயல்பாகும்.

**48.காலம் களனே காரணம் என்றுஇம்**
**மூவகை ஏற்றி மொழிநரும் உளரே.**

1.நூல் இயற்றப்பட்ட காலம், 2.நூலை அரங்கேற்றி அவைக்களம், 3.நூல் இயற்றியதற்குரிய காரணம் ஆகி மூன்றையும் சேர்த்து பதினொன்று இயல்புகளாகச் சொல்வோ உளர்.

## நூலுக்குப் பெயரிடும் முறை

**49. முதல்நூல் கருத்தன் அளவு மிகுதி**
**பொருள் செய்வித்தோன் தன்மை முதல் நிமித்தனும்**
**இடுகுறி யானும் நூற்கு எய்தும் பெயரே**

முதல்நூல், ஆக்கியோன், அளவு, மிகுதி, பாடுபொரு செய்வித்தோன், தன்மை, இடுகுறி முதலான காரணங்களால் நூலி நூல் பெயர் பெறும்.

1. முதல்நூலால் பெயர் பெற்றவை – பாரதம், இராமாயணம்
2. ஆக்கியோனால் பெயர் பெற்றவை – அகத்தியம், தொல்காப்பிய
3. அளவால் பெயர் பெற்றவை – பன்னிருபடலம், நாலடியார்
4. மிகுதியால் பெயர் பெற்றவை – ஐயங்குறு நூறு களவியல்
5. பொருளால் பெயர் பெற்றவை – அகப்பொருள், புறப்பொரு



Scanned by CamScanner
Scanned by CamScanner

6. செய்வித்தோனால் பெயர் பெற்றவை-சாதவாகனம்,வீரசோழியம்
7. தன்மையால் பெயர் பெற்றவை - சிந்தாமணி, நன்னூல்
8. இடுகுறி பெயர் பெற்றவை - நிகண்டு,கலைக்கோட்டுத் தண்டு

மேற்கூறியவை மட்டுமல்லாது கீழ்க்கண்ட காரணங்களாலும் பெயர் அமையும்.

1. முதற்குறிப்பு - ஆத்திச்சூடி கொன்றைவேந்தன்
2. இடம் - களவழி நாற்பது
3. காலம் - கார்நாற்பது
4. ஆக்கியோனின் ஆசிரியர் - நேமிநாதம்
5. உவமை - திரிகடுகம், சிறுபஞ்சமூலம்

## நூல் யாப்பு

**நூல் யாப்பின் வகைகள்**

**50. தொகுத்தல் விரித்தல் தொகைவிரி மொழிபெயர்ப்பு**
**எனத்தகும் நூல்யாப்பு ஈரிரண்டு என்ப.**

1.விரிந்து கிடப்பவற்றைத் தொகுத்துச் சொல்லுதல், 2.தொகையாய் இருப்பவற்றை விரித்துச் சொல்லுதல், 3. தொகுத்தும் விரித்தும் சொல்லுதல், 4. ஒரு மொழியில் உள்ள நூலை வேறு மொழியில் பெயர்த்துக் கூறுதல் என நூல் யாப்பு நான்கு வகைப்படும்.

முதல் நூலைப் பின்பற்றிச் செய்யப்படும் முறையைக் குறிப்பது யாப்பு ஆகும்.

### சிறப்புப் பாயிரம் இயற்றுவதற்கு உரியோர்

**51. தன் ஆசிரியன் தன்னொடு கற்றோன்**
**தன் மாணாக்கன் தகும் உரைகாரன் என்று**
**இன்னோர் பாயிரம் இயம்புதல் கடனே.**

1.தனக்கு நூலைக் கற்பித்த ஆசிரியன், 2. தன்னுடன் பயின்ற ஒரு சாலை மாணாக்கன், 3. தன்னிடம் பாடம் கற்ற மாணவன்,



Scanned by CamScanner
Scanned by CamScanner

4. தான் செய்த நூலுக்கு உரை செய்யும் தகுதி படைத்தோன் ஆகிய நால்வருள் யாதேனும் ஒருவர் சிறப்புப் பாயிரம் இயற்றுவதற்கு உரியவர் ஆவர்.

### சிறப்புப்பாயிரம் பிறர் இயற்றக் காரணம்

52. தோன்றா தோன்றித் துறைபல முடிப்பினும்
தான்தற் புகழ்தல் தகுதி அன்றே.

மற்றவர்க்குத் தோன்றாத நுட்பங்கள் எல்லாம் காட்டிப் பல துறைப்பட்டு விரிந்த நூலைச் செய்து முடித்தாலும் தானே தன்னைப் புகழ்ந்து கொள்ளுதல் தகுதியில்லை எனவேதான் சிறப்புப் பாயிரத்தை பிறர் எழுதுகின்றனர்.

### தற்புகழ்ச்சி குற்றமாகாத இடங்கள்

53. மன்னுடை மன்றத்து ஓலைத் தூக்கினும்
தன்னுடை ஆற்றல் உணரார் இடையினும்
மன்னிய அவையிடை வெல்லுறு பொழுதினும்
தன்னை மறுதலை பழித்த காலையும்
தன்னைப் புகழ்தல் தகும் புலவோற்கே

1.மன்னன் அவைக்கு ஓலை எழுதுதல், 2. தன் வலிமையை அறியாதவர், 3.அவைக்களத்தில் வாதம் செய்து வெல்லுதல், 4. தன்னைப் பிறர் பழிக்கின்ற இடம் ஆகிய நான்கு இடங்களில் புலவன் தன்னைத் தான் புகழ்ந்து கொள்ளுதல் தகுதியானதாகும்.

### பாயிரத்தின் சிறப்பு

54. ஆயிர முகத்தான் அகன்றது ஆயினும்
பாயிரம் இல்லது பனுவல் அன்றே.

ஆயிரம் உறுப்புகளைப் பெற்று பரந்து விரிந்த நூலாக இருந்தாலும் பாயிரம் இல்லையெனில் அது நூலாகாது.



Scanned by CamScanner
Scanned by CamScanner

பாயிரத்தின் இன்றியமையாமை

55. மாடக்குச் சித்திரமும் மாநகர்க்குக் கோபுரமும்
ஆடமைத் தோள் நல்லார்க்கு அணியும்போல் நாடிமுன்
ஐதுரையா நின்ற அணிந்துரையை எந்நூற்கும்
பெய்துரையா வைத்தார் பெரிது.

மாளிகைக்கு ஓவியமும், மாநகரத்திற்குக் கோபுரமும் அசைகின்ற மூங்கில் போன்ற தோளை உடைய பெண்ணிற்கு அணிகலனும் அழகு சேர்ப்பனவாகும். அவற்றைப் போல எண்ணி, அழகிய பொருளைச் சொல்லுகின்ற பாயிரத்தை எவ்வகைப்பட்ட பெரிய நூலுக்கும் முதலில் சேர்த்து வைத்தார் பெரியோர்.

## பாயிரவியல் முற்றும்



Scanned by CamScanner

Scanned by CamScanner

# எழுத்தியல்

## கடவுள் வாழ்த்து

பூக்கள் நிறைந்த அசோக மரத்தின் நிழலின் கீழ் அமர்ந்திருக்கின்ற நான்முகக்கடவுளாகிய அருகதேவனை வணங்கி எழுத்திலக்கணத்தை சொல்லப் புகுவதாக நன்னூலார் கூறுகின்றார்.

## எழுத்திலக்கணத்தின் பகுதிகள்

எழுத்திலக்கணத்தினை 12 பகுதிகளாகப் பகுத்து உரைக்கின்றார் நன்னூலார் 1.எண், 2.பெயர் 3.முறை 4.பிறப்பு 5.உருவம் 6.மாத்திரை 7.மொழி இடைநிலை எழுத்துக்கள் (மெய் மயக்கம்) 8.மொழி முதல் எழுத்துக்கள் 9.மொழி இறுதி எழுத்துக்கள் 10.போலி 11.பதம் 12.புணர்ப்பு என வகைப்படுத்தி எழுத்திலக்கணம் சொல்லப்படுகிறது. போலி வரை உள்ள 10 பகுதிகள் எழுத்தியலில் சொல்லப்படுகிறது. பதம் பற்றிப் பதவியலிலும் புணர்ச்சி இலக்கணம் பற்றி உயிரீற்றுப் புணரியல், மெய்யீற்றுப்புணரியல், உருபுப் புணரியல் ஆகிய முன்று இயல்களிலும் சொல்லப்படுகிறது.

## எழுத்துக்களின் எண்ணிக்கை

அணுத்திரள் ஒலி எழுத்து. அவ்வெழுத்தே மொழிக்கு முதற்காரணமாக அமைகிறது. அது முதல், சார்பு என இருவகைப்படும்.

## முதலெழுத்துக்கள் (30)

அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ, ஆகிய உயிர் 12 ம்- க்ங் ச்ஞ் ட்ண் த்ந் ப்ம் ய்ர் ல்வ் ழ்ள் ற்ன் ஆகிய 18 மெய்களும் ஆக முப்பது எழுத்துக்களும் முதல் எழுத்துக்களாகும்.

## சார்பெழுத்துக்கள் (10) முன்னுரை:

தனித்து இயங்க முடியாமல் முதலெழுத்தைச் சார்ந்து வரும் எழுத்துக்கள் சார்பெழுத்துக்கள் எனப்படும். 1.உயிர் மெய்(216) 2.ஆய்தம் (8) 3. உயிரளபெடை (21 ) 4.ஒற்றளபெடை (42) 5.குற்றியலுகரம்(36) 6.குற்றியலிகரம்(37) 7.ஐகாரக்குறுக்கம் (3) 8.ஔகாரக்குறுக்கம்(1 ) 9.மகரக்குறுக்கம் (3 ) 10.ஆய்தக்குறுக்கம் (2) என பத்து வகைப்படும்.



Scanned by CamScanner

Scanned by CamScanner

## பெயர்

பெயர் இடுகுறி, காரணம் என இருநிலையில் அமையும். இரு வகைப் பெயர்களும் பொதுவாகவும் சிறப்பாகவும் வரும். காரணப் பொதுப்பெயர், காரண சிறப்புப் பெயர், இடுகுறிப் பொதுப்பெயர், இடுகுறிசிறப்புப்பெயர் என அமையும்.

## எழுத்துக்களின் பெயர்

அகர முதல் ஒளகார இறுவாய் 12-ம் உயிர்எழுத்துக்கள் எனப்படும். ககர முதல் னகரம் வரையுள்ள 18-ம் மெய் எனப்படும். மேலும் மெய்கள் - வல்லினம், மெல்லினம், இடையினம் என மூவகைப்படும். அ, இ, உ, எ, ஒ ஐந்தும் குறில். ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ ஏழும் நெடில். அ,இ,உ, ஆகிய மூன்றும் சுட்டெழுத்துக்கள். அகச் சுட்டு, புறச்சுட்டு என சுட்டு இரு வகைப்படும. அவன், இவன், உவன்-அகச்சுட்டு, அப்பையன், அக்கொற்றன்-புறச்சுட்டு. ஆ, எ ஏ, ஓ, யா, ஐந்தும் வினா எழுத்துக்கள். ஐ, ஔ இரண்டிற்கும் இ,உ இனவெழுத்துக்கள் ஆகும். எழுத்துக்கள் பிறக்கும்முறை, இடம், முயற்சி, மாத்திரை, பொருள், வடிவம் இவற்றை வைத்து இன எழுத்து அமையும்.

## எழுத்துக்களின் பிறப்பு

எழுத்துக்களின் பிறப்பிடம் தலை, கழுத்து, மூக்கு, மார்பு. என நான்காக அமையும். பிறக்கும்முறை வாயுறுப்புக்களாகிய நாக்கு, இதழ், பல், அண்ணம் ஆகியவற்றின் செயல்பாட்டால் பிறத்தலாகும். உள்ளிழுத்துத் காற்றைத் தங்க வைக்கும் இடம் பிறப்பிடம். அக்காற்றை வாயுறுப்புகளின் செயல்பாட்டால் ஒலியாக வெளியிடுவது பிறப்பு முறை. உயிரெழுத்துக்களின் பிறப்பிடமும் இடையின எழுத்துக்களின் பிறப்பிடமும் கழுத்து. வல்லினம்– மார்பு மெல்லினம்– மூக்கு.

## உயிரெழுத்துக்கள் பிறக்கும் முறை

அ,ஆ - வாயைப் பிளத்தலால் பிறக்கும் இ,ஈ,எ,ஏ ஐ ஐந்தும் முதல் நா அண்பல்லை உரசப் பிறக்கும் உ,ஊ,ஒ,ஓ,ஔ ஐந்தும் இதழ்குவிவதால் பிறக்கும்.



Scanned by CamScanner

Scanned by CamScanner

**மெய்கள் பிறக்கும் முறை**

க்,ங் - முதல் நா முதலண்ணத்தைப் பொருந்தப் பிறத்தல், ச்,ஞ் இடை நா இடையண்ணம், ட்,ண் - நுனி நா நுனி அண்ணம் பொருந்தப் பிறக்கும். த்,ந் - பற்களின் அடிப்பகுதியை நுனி நாக்குப் பொருந்திப் பிறக்கும். ப்,ம் - இதழ் இணைவு. ய் - அடி நா அடியண்ணத்தைப் பொருந்துதல். ர்,ழ் - நுனி நாக்கு அண்ணத்தை வருடப் பிறக்கும். ல்,ள் - முதல் நா விளிம்பு வீங்கி அண்பல்லை உரசப் பிறக்கும். வ் - மேற்பல் இதழ் இயையப் பிறக்கும். ற்,ன்- நுனி நா நுனியண்ணத்தைப் பொருந்திப் பிறக்கும்.

**சார்பெழுத்துக்கள் பிறப்பு**

தத்தம் சார்ந்து வரும் முதலெழுத்துக்களின் பிறப்பே சார்பெழுத்துக்களின் பிறப்பு முறையாகும்.

**மாத்திரை**

எழுத்துக்களை ஒலிக்கும் கால அளவு மாத்திரை எனப்படும். கண் இமைப்பதும் கை நொடிக்கும் நேரமும் ஒரு மாத்திரையாகும். அளபெடை - 3 மாத்திரை நெடில் - 2 மாத்திரை, குறில், ஐகாரக் குறுக்கம். ஔகாரக் குறுக்கம், ஒற்றளபெடை, இவற்றிற்கு 1 மாத்திரை. மெய், குற்றியலிகரம்,குற்றியலுகரம் ஆய்தம் 1/2 மாத்திரை மகரக் குறுக்கம், ஆய்தக்குறுக்கம் 1/4 மாத்திரை. சொன்ன அளவைவிட நீண்டு ஒலிக்கும் இடங்களும் உண்டு. இசை, விளித்தல், பண்டமாற்று ஆகியவற்றில் மாத்திரை அளவு நீளும்.

**மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்கள்**

உயிர் 12 - ம் மொழிக்கு முதலில் வரும். மெய்யெழுத்துக்களில் க ச த ப ங ஞ ண ந ம ய வ ஆகியன வரும். மெய்யாக மொழிக்கு முதலில் வராது. உயிருடன் சேர்ந்து உயிர்மெய்யாய் வரும்.

க ச த ப ந ம 12 உயிருடனும் கூடிவரும். ங – சுட்டுடனும் எகர வினாவுடனும் சேர்ந்து வரும். ஞ - அ,ஆ,எ,ஒ நான்கு உயிரோடு வரும். ய – அ,ஆ,உ,ஊ, ஓ,ஔ ஆறு உயிர்களுடன் சேர்ந்து வரும். வ – உ, ஊ,ஒ,ஓ நான்கு தவிர்த்து மீதமுள்ள எட்டுடன் வரும்.



Scanned by CamScanner
Scanned by CamScanner

### மொழிக்கு இறுதி எழுத்துக்கள் (24)

உயிர் - 12 ம் மொழிக்கு இறுதியில் வரும் நெடில் எழுத்துக்கள் அளபெடையாக வரும்போது குறில் இறுதியில் வரும். நெடில் ஏழும் ஓரெழுத்து ஒருமொழியாக முதலில் வரும். ஔகரரம் கௌ, வௌ என உயிர்மெய்யாய் இறுதியில் வரும். ஞ ண ந ம ன ய ர ல வ ழ ள ஆகிய 11 மெய்யும் மெய்யாகவே மொழிக்கு இறுதியில் வரும் ( உரிஞ், மண், பொரிந்து, மரம், பொன், வேய், கார், வேல், தெவ், வீழ், வாள்).

### மொழிக்கு இடையில் வரும் எழுத்துக்கள் (மெய்ம்மயக்கம்)

மெய்ம்மயக்கம் இரு வகைப்படும் 1. வேற்றுநிலை மெய்ம்மயக்கம் 2. உடன் நிலை மெய்ம்மயக்கம். ஒரு மெய்யின் அருகில் ஒரு மெய் உயிர்மெய்யாக வருவது மெய்மயக்கம் ஆகும். தன் மெய்யின் அருகில் தன்மெய்யே உயிர்மெய்யாய் வருவது உடன்நிலை மெய்ம்மயக்கம் ஆகும். ர,ழ தவிர மற்ற 16 மெய்யும் உடன்நிலை மெய்மயக்கமாய் வரும். க ச த ப தவிர மீதமுள்ள 14 மெய்யும் வேற்றுநிலை மெய்மயக்கமாய் வரும்.

### ஈரொற்று உடன்நிலை

இரண்டு மெய்கள் சேர்ந்து உடன் வருவது ஈரொற்று உடன்நிலை ஆகும். ய்,ர்,ழ், என்னும் மெய்களின் முன் க ச த ப ங ஞ ந ம என்னும் எட்டு மெய்களும் ஈரொற்றாக வரும்.

### போலி எழுத்துக்கள்

ஒரு எழுத்துக்குப் பதிலாக மற்றொரு எழுத்து வந்து அவ்வெழுத்து தரும் பொருளையே தருவது போலியாகும்.இதனை எழுத்துப்போலி என்பர். மொழி முதற் போலி, இடைப்போலி, கடைப்போலி என மூன்று வகைப்படும்.

### சந்தியக்கரம்

ஐ,ஔ இரண்டு எழுத்துக்கும் இன எழுத்து இன்மையால் ஐ – அஇ, அய் என்ற போலி எழுத்துக்கள் வந்து ஐகாரத்தைப் போல ஒலிக்கும். ஔ – அஉ, அவ் போலி எழுத்துக்களாக வரும்.



Scanned by CamScanner

Scanned by CamScanner

### எழுத்துச் சாரியைகள்

எழுத்துக்களை ஒலிப்பதற்குப் பயன்படுத்தப்படு சாரியைகள் எழுத்துச் சாரியை எனப்படும். கரம், காரம், கான் என மூன்று வகைப்படும். குறில் மூன்று சாரியைகளையும் பெறு நெடில் காரச் சாரியை பெறும். ஐ, ஔ கான் சாரியையும் பெறு மெய்எழுத்துக்கள் கரச் சாரியைப் பெறும்.



Scanned by CamScanner

Scanned by CamScanner

கடவுள் வணக்கம்

56. பூமலி அசோகின் புனைநிழல் அமர்ந்த
நான்முகன் தொழுது நன்கு இயம்புவன் எழுத்தே

பூக்கள் நிறைந்த அசோக மரத்தினது நிழலின் கீழ் வீற்றிக்கும் நான்கு திருமுகங்களை உடைய அருகதேவனை வணங்கி எழுத்திலக்கணத்தை நன்றாக எடுத்துக்கூறுவேன்.

இயம்புதல் – சொல்லுதல்

புனைநிழல் – அலங்கரிக்கப்பட்ட நிழல்

நன்கு இயம்புவன் எழுத்தே என்றதனால் நுதலிப்புகுதல் உத்தியைக் கையாண்டுள்ளார்.

எழுத்தே – ஏ காரம் ஈற்றசை

## எழுத்திலக்கணக் கூறுகள்

57. எண்பெயர் முறை பிறப்பு உருவம் மாத்திரை
முதல் ஈறு இடைநிலை போலி என்றா
பதம் புணர்ப்பு எனப் பன்னிரு பாற்றதுவே.

1.எழுத்துக்களின் எண்ணிக்கை, 2. பெயர், 3. முறை வைப்பு, 4. பிறக்கும் முறை, 5. வடிவம், 6. எழுத்துக்கள் ஒலிக்கின்ற கால அளவு, 7. மொழிக்கு ஈற்றில் நிற்கும் எழுத்துக்கள், 9. இடையில் நிற்பவை, 10.போலி, 11. எழுத்துக்கள் இணைந்து பதம் ஆகுதல், 12. அப்பதங்கள் புணரும் புணர்ச்சி என எழுத்திலக்கணம் பன்னிரண்டு பகுதிகளைக் கொண்டது.

தொகுத்துச் சுட்டல் எனும் உத்தி அடுத்து வருவனவெல்லாம் வகுத்துக் காட்டல் எனும் உத்தியாகும். முதலில் உள்ள பத்தும் அகத்திலக்கணம் மற்ற இரண்டும் புறத்திலக்கணம்.

## எழுத்தும் அதன் வகையும்.

58. மொழி முதற் காரணமாம் அணுத்திரள் ஒலி
எழுத்து அது முதல்சார்பு எனஇரு வகைத்தே.



Scanned by CamScanner

Scanned by CamScanner

மொழிக்கு முதல் காரணமாய் அமையும் அணுத்திரள் ஒலி எழுத்து அவ்வெழுத்து முதல் சார்பு என இருவகைப்படும்.

அணுத்திரள் - அணுக்கூட்டம் செவிப்புலனாம் அணுவை குறிப்பிடுகிறார். மொழி உருவாகக் காரணம் எழுத்து அதுபோ எழுத்து உருவாகக் காரணமாய் அமைவது ஒலி நுட்ப ஒ உண்டாக்குதல். ஒலி, எழுத்து எழுதப்படுதல் (வரிவடிவம்) ஆ இரண்டும் இணைந்த காரணப் பெயரே எழுத்து ஆகும்.

"எழுதப்படுதலின் எழுத்தே"

(யாப்பெருங்கலம்)

## முதல் எழுத்துக்கள் – 30

**59. உயிரும் உடம்புமாம் முப்பதும் முதலே**

உயிரெழுத்துப் பன்னிரண்டு, மெய்யெழுத்துப் பதினெ ஆகிய முப்பதும் முதல் எழுத்துக்களாகும்.தொகையாகச் சொல்லு போது முதலெழுத்து முப்பது வகுத்துச் சொல்லும் போது உ பன்னிரண்டு, உடம்பாகிய மெய் பதினெட்டு ஆக முப்பது இரண்டு வகையில் அடங்கும்.

## சார்பெழுத்துக்கள் – 10

**60. உயிர்மெய் ஆய்தம் உயிரளபு ஒற்றளபு**
**அஃகிய இ உ ஐ ஔ மஃகான்**
**தனிநிலை பத்தும் சார்பெழுத்து ஆகும்.**

1. உயிர்மெய், 2. ஆய்தம், 3. உயிரளபெடை, ஒற்றளபெடை, 5. குற்றியலிகரம், 6. குற்றியலுகரம், ஐகாரக்குறுக்கம், 8. ஔகாரக்குறுக்கம், 9. மகரக்குறுக் 10.ஆய்தக்குறுக்கம் ஆகிய பத்தும் சார்பெழுத்தாகும்.

அஃகிய - குறுகிய தன் மாத்திரை அளவிலிருந்து குறை ஒலிக்கும் இ,உ, ஐ, ஔ, மகரம் ஆய்தம் இவையே குறுக்கங்க எனப்படும்.



Scanned by CamScanner

Scanned by CamScanner

சார்பெழுத்துக்களின் விரி

61. உயிர்மெய் இரட்டு நூற்றெட்டு உயர்ஆய்தம்
எட்டு உயிரளபு எழுமூன்று ஒற்றள பெடை
ஆறேழ் அஃகும் இம்முப்பான்ஏழ்
உகரம் ஆறாறு ஐகான் மூன்றே
ஔகான் ஒன்றே மஃகான் மூன்றே
ஆய்தம் இரண்டொடு சார்பெழுத்து உறுவிரி
ஒன்றொழி முந்நூற்று எழுபான் என்ப.

உயிர்மெய் - 216, முற்றாய்தம் - 8, உயிரளபெடை - 21, ஒற்றளபெடை - 42, குற்றியலிகரம்- 37, குற்றியலுகரம் - 36, ஐகாரக்குறுக்கம் - 3, ஔகாரக்குறுக்கம் - 1, மகரக் குறுக்கம் - 3, ஆய்தக் குறுக்கம் - 2 சார்பெழுத்துக்களின் மிகுந்த விரி முந்நூற்றி அறுபத்து ஒன்பதாம் என்று சொல்லுவர் புலவர்.

## பெயர்க்கு பொது இலக்கணம்

62. இடுகுறி காரணப் பெயர்பொதுச் சிறப்பின.

ஒரு பொருளுக்கு காரணம் கருதியோ காரணம் இன்றி இடுகுறியாகவோ பெயரிடலாம். அப்பெயர் பல பொருள்களுக்கு பொதுவான பொதுப்பெயராகவும் ஒரு பொருளுக்குரிய சிறப்புப் பெயராகாகவும் அமையலாம்.

மரம் - என்பது இடுகுறிப்பெயர் அனைத்து வகை மரங்களுக்கும் பொதுவாய் அமைவதால் இது இடுகுறி பொதுப்பெயர் ஆயிற்று.

மா,பலா – இடுகுறிப்பெயராய் இருப்பினும் ஒரு பொருளுக்கு சிறப்பாய் அமைவதனால் இடுகுறி சிறப்புப்பெயர்

அணி - அணியப்படுகின்ற காரணத்தினால் இது காரணப் பெயர் ஆபரணங்கள் அனைத்திற்கும் பொதுவாய் அமைதலின் காரணப் பொதுப்பெயராயிற்று

முடி, கழல் - என்பன முடியில் கவிழ்க்கப்படுதல், காலில் அணியப்படுதல் என்று ஒரு பொருளுக்கு சிறப்பாய் அமைந்ததினால் இவை காரணச் சிறப்புப் பெயராயிற்று.



Scanned by CamScanner

Scanned by CamScanner

காரணப்பெயர், இடுகுறிப்பெயர், காரண இடுகுறிப்பெயர் என பெயர் மூவகைப்படும்.

பொன் என்பது இடுகுறிப்பெயர்

பொன்னன் என்பது காரணப்பெயர்

ஒரு பெயர் காரணம் கருதிய பொழுது ஒரு பொருளுக்கு காரணம் கருதாத பொழுது இடுகுறியாய் ஒரு பொருளுக்கு செல்லுவதுண்டு.

முக்கணன் - இப்பெயர் காரணம் கருதிய பொழுது விநாயக கடவுளையும் காரணங் கருதாத பொழுது சிவபெருமானையு குறித்து நிற்கின்றது. அதேபோல் நாற்காலி, அந்தணன் போன் பெயர்களையும் கண்டு கொள்க.

## எழுத்துக்களின் பெயர்

63. **அம்முதல் ஈராறு ஆவி கம்முதல்**
**மெய்ம் மூவாறு என விளம்பினர் புலவர்.**

1. அ முதலிய பன்னிரண்டு எழுத்துக்கள் உயிரெழுத்துக்கள் 2. க முதலிய பதினெட்டு எழுத்துக்கள் மெய்யெழுத்துக்கள் ஆகு என்று கற்றறிந்த அறிவுடையோர் சொல்லுவர்.

உயிர்

தனித்தும் உடம்போடு கூடியும் இயங்கவல்லது. ஆகையா இவை உயிரெழுத்துக்கள் எனப்பட்டன. உயிர் என்பது காரணப்பொதுப் பெயர்.

அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ

மெய்

உயிருடன் இயங்கும் தன்மை உடையது. இயங்கும் தன்மை இல்லாத போது மெய் என உவமை ஆகுபெயராயும் உயிருடன் கூடி இயங்கும் தன்மை உடையபோது காரணப்பொதுப்பெயராயும் ஆகியது.

**உயிர்க்குறில் - 5**

64. **அவற்றுள்**
**அ, இ, உ, எ ஒக்குறில் ஐந்தே.**



Scanned by CamScanner

Scanned by CamScanner

ஆவியும் மெய்யும் என்று கூறியனவற்றுள் அ, இ, உ, எ, ஒ என்னும் ஐந்தும் குற்றெழுத்துக்களாகும்.

குற்றெழுத்து – குறுகிய ஓசையையுடைய குறில் எழுத்து

## உயிர் நெடில் – 7

**65. ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஔ நெடில்.**

ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஔ என்னும் ஏழும் நெட்டெழுத்துக்களாகும்.

நெட்டெழுத்து – நீண்ட ஓசையுடைய நெடில் எழுத்து.

## சுட்டெழுத்து – 3

**66. அ, இ, உ ம் முதல் தனிவரின் சுட்டே.**

அ, இ, உ என்னும் மூன்றும் மொழிக்கு முதலில் தனித்து வந்து சுட்டுப்பொருளைக் காட்டவரின் சுட்டெழுத்தாகும்.

அகச்சுட்டு, புறச்சுட்டு, என இரண்டு வகைப்படும்.

அக்கொற்றன் , இக்கொற்றன், உக்கொற்றன் இவை

புறத்து வந்து சுட்டியதால் புறச்சுட்டு

அவன், இவன், உவன், – அகத்துள் வந்து சுட்டியதால் அகச்சுட்டு

அ – சேய்மைப் பொருளைச் சுட்டுதல்

இ – அண்மைப் பொருளைச் சுட்டுதல்

உ – இடைப்பட்ட பொருளைச் சுட்டுதல்

## வினா எழுத்துக்கள் – 5

**67. எயா முதலும் ஆஓ ஈற்றும்**
**ஏ இரு வழியும் வினா ஆகும்மே.**

எ, யா – இரண்டும் மொழிக்கு முதலிலும் ஆ, ஓ – இரண்டும் ஈற்றிலும் ஏ – இரண்டிடத்திலும் தனித்து வினாப் பொருளைக் காட்டவரின் வினா எழுத்தாகும்.



Scanned by CamScanner
Scanned by CamScanner

எவன் யாவன்
எவை யாவை } முதலில் வந்தன
எது யார்

அவனா அவனோ
கொற்றனா கொற்றனோ } ஈற்றில் வந்தன.
செய்தானா செய்தானோ

ஏவன் கொற்றனே, அவனே - முதலிலும் ஈற்றிலும் வந்தது.

## மெய்யெழுத்துக்கள்

### வல்லெழுத்து - 6

**68.வல்லினம் க ச ட த ப ற எனஆறே.**

க் ச் ட் த் ப் ற் - என்ற ஆறும் வல்லெழுத்தாகும். வன்மையான ஓசையுடையதனால் வல்லினம் எனவும் வன்கணம் எனவும் பெயர் பெறும்.

தலையில் காற்றைத் தங்க வைத்து வாயறைக்குள் காற்றைத் தடுத்து வெளியிடும் போது பிறக்கின்ற காரணத்தால் அடைப்பொலிகள், தடையொலிகள், வெடிப்பொலிகள் எனவும் மொழியியல் அறிஞர் வழங்குவர்.

வாயறைக்குள் காற்று தடுத்து நிறுத்துவதனால் தடையொலி, அடைப்பொலி, ஒலிப்பினால் - வெடிப்பொலி

### மெல்லெழுத்துகள் - 6

**69. மெல்லினம் ங ஞ ண ந ம ன எனஆறே.**

ங், ஞ், ண், ந், ம், ன் - என்னும் ஆறும் மெல்லெழுத்துக்களாகும்.

மூக்கை இடமாகக் கொண்டு பிறப்பன. மெல்லிய ஓசை உடையன. மென்கணம் எனவும் பெயர் பெறும்.



Scanned by CamScanner
Scanned by CamScanner

## இடையெழுத்துகள் - 6

70. இடையினம் யரல வழளன ஆறே.

ய், ர், ழ், வ், ல், ள், என்னும் ஆறும் இடையின எழுத்துக்கள் ஆகும். இடைக்கணம் எனவும் பெயர் பெறும்.

## இனவெழுத்துக்கள்

71. ஐஔ இஉச் செறிய முதலெழுத்து
இவ்விரண்டு ஓரினமாய் வரல் முறையே.

ஐ, ஔ ஆகிய இரண்டு நெட்டெழுத்துக்களும் இனம் இல்லாதவை. இவை ஈ, ஊ காரங்களுக்கு இனமாய் அமையும் இ, உ இரண்டையும் இனமாகக் கொள்ளும்.

அ ஆ, இ ஈ, உ ஊ, எ ஏ, ஐ இ, ஒ ஓ, ஔ உ பிறப்பிடம் அல்லது பிறப்பு முறை இவற்றால் ஒப்புமை உடைய எழுத்துக்கள் இனவெழுத்துக்களாக அமையும்.

ஐ, ஔ தனக்கு இனமான குறில் எழுத்தைப் பெறாதவை அவைகளுக்கு இ, உ இனமாயிற்று

## இனவெழுத்து என்பதன் காரணம்

72. தானம் முயற்சி அளவு பொருள் வடிவு
ஆனஒன்று ஆதியோர் புடைஒப்பு இனமே.) 8marks

1. எழுத்துக்களின் பிறப்பிடம், 2. பிறப்பு, முயற்சி, 3. ஒலிக்கின்ற அளவு 4. பொருள் தருதல், 5. எழுத்தின் வடிவம், ஆகிய ஐந்தின் காரணமாக இனஎழுத்து அமையும்.

முன் நூற்பாவில் காரணம் சொல்லாது இனம் சுட்டியமைக்கு இவ்விடத்தில் காரணத்தைச் சுட்டுகிறார்.

## எழுத்தை வரிசைப் படுத்தும் முறை

73. சிறப்பினும் இனத்தினும் செறிந்துஈண்டு அம்முதல்
நடத்தல் தானே முறையா கும்மே.



Scanned by CamScanner

Scanned by CamScanner

சிறப்பினாலும் இனத்தினாலும் பொருந்தி எழுத்துக்கள் ஒன்றன் பின் ஒன்றாய் முறைப்படுத்தப்பட்டுள்ளன. இவ் உலகத்தில் அகரம் முதலாக வழங்குவதே எழுத்துக்களின் முறையாகும். தனித்து இயங்கும் தன்மை உடையன உயிர் ஆகையால் அவை முன்னும் தனித்து இயங்கும் தன்மை இல்லாத மெய் அதன் பின்னும் நிறுத்தப்பட்டன.

குறிலின் விகாரமே நெடில் என்பதால் குறிலிக்குப் பின் நெட்டெழுத்துக்கள் நின்றன.

## எழுத்துக்களின் பிறப்பு

**74. நிறையுயிர் முயற்சியின் உள்வளி துரப்ப**
**எழும் அணுத் திரள் உரம் கண்டம் உச்சி**
**மூக்கு உற்றுஇதழ் நாப்பல் அணத்தொழிலின்**
**வெவ்வேறு எழுத்து ஒலியாய் வரல் பிறப்பே.**

குறைவின்றி நிறைந்த உயிரினது முயற்சியால் உள்ளிருந்து இழுக்கப்படும் காற்று (செவிக்குப் புலனாகும் அணுக்கூட்டம்) மார்பு, கழுத்து, தலை, மூக்கு ஆகிய நான்கு இடத்தில் பொருந்தி நின்று வாயுறுப்புக்களாகிய இதழ், நாக்கு, பல், அண்ணம், ஆகியவற்றின் முயற்சியால் வேறு வேறு எழுத்தாகிய ஓசைகளாய்த் தோன்றுதல் பிறப்பாகும்.

பிறப்பிடம் – தலை, மார்பு, கழுத்து, மூக்கு
(காற்றை நிறுத்தும் இடம்)

பிறப்பு முறை – பல், நா, இதழ், அண்ணம்

நிறுத்தப்பட்ட காற்றை எடுத்து வாயுறுப்புகளின் முயற்சியால் வெளியிடுதல்

## முதல் எழுத்துக்களின் பிறப்பிடம்

**75. அவ்வழி,**
**ஆவி இடைமை இடம்மிடறு ஆகும்.**
**மேவும் மென்மை மூக்கு உரம்பெறும் வன்மை**



Scanned by CamScanner
Scanned by CamScanner

முன் சொன்ன வழியால் பிறக்கும் இடத்து உயிரெழுத்துக்களும் இடையின எழுத்துக்களும் கழுத்தை இடமாகக் கொண்டு பிறக்கும். மெல்லினம் மூக்கையும் வல்லினம் மார்பையும் இடமாகக் கொண்டு பிறக்கும்.

உயிர் – கழுத்து

வல்லினம் – மார்பு

மெல்லினம்– மூக்கு

இடையினம் – கழுத்து

## உயிர் எழுத்துக்களின் பிறப்பு

**76. அவற்றுள்**

**முயற்சியுள் அ ஆ அங்காப் புடைய**

முதலெழுத்துக்களுள் ஆ ஆ இரண்டும் அண்ணத்தின் தொழிலாகிய அங்காத்தலால் பிறக்கும்.

அங்காத்தலால் - வாயைப் பிளத்தலல். கழுத்தில் நிறுத்தப்பட்ட காற்று அண்ணத்தின் தொழிலால் வாயைப் பிளக்கும்போது அ ஆ பிறக்கும்.

**77.இஈ எஏ ஐஅங் காப்போடு**

**அண்பல் முதல்நா விளிம்புற வருமே.**

இ, ஈ, எ, ஏ, ஐ ஆகிய ஐந்தொழுத்தும் வாயைப் பிளத்நலோடு அண்பல்லை நாவின் அடியின் ஓரம் பொருந்தப் பிறக்கும்.

அண்பல் – மேல்வாய்ப்பல் நாக்கின் விளிம்பால் உரசப்படும் பல்.

**78. உஊ ஒஓ ஔ இதழ் குவிவே.**

உ, ஊ, ஒ, ஓ, ஔ ஆகிய ஐந்தும் உதடுகள் குவிகின்ற முயற்சியால் பிறக்கும்.



Scanned by CamScanner

Scanned by CamScanner

## மெய் எழுத்துக்களின் பிறப்பு

**க்ங்,ச்ஞ்,ட்ண் பிறக்கும் முறை**

**79.கஙவும் சஞவும் டணவும் முதல் இடை**

நுனிநா அண்ணம் உறமுறை வருமே.

அடி நா அடி அண்ணத்தைப் பொருந்தும் போது க்ங் என்பனவும், நடு நா நடு அண்ணத்தைப் பொருந்த ச்ஞ் என்பனவும், நுனி நாநுனி அண்ணத்தைப் பொருந்த ட்ண் ஆகியனவும் பிறக்கும்.

முதல் நா – அடி நா

அண்ணம் – வாயின் மேற்பகுதியாகிய மேல்வாய்

அடி மேல்வாய், நடு மேல்வாய், கடை மேல்வாய் என்று உரையாசிரியர்கள் குறிப்பிடுவதுண்டு.

**த், ந்**

**80. அண்பல் அடிநா முடிவுறத் தந வரும்.**

மேல்வாய்ப் பல்லினது அடியை நுனி நாக்கு பொருந்த த்,ந் பிறக்கும்.

**ப், ம்**

**81. மீகீழ் இதழ் உறப் பம்மப் பிறக்கும்.**

மேல் உதடும் கீழ் உதடும் பொருந்த ப், ம் இரண்டும் பிறக்கும்.

**ய்**

**82. அடிநா அடியணம் உறயத் தோன்றும்.**

நாக்கின் அடியானது மேல்வாய் அடியைப் பொருந்த ய் பிறக்கும்.

**ர், ழ்**

**83. அண்ணம் நுனிநா வருட ரழ வரும்**

மேல் வாயை நாக்கின் நுனி வருடும்போது (தடவ) ர்,ழ் இரண்டும் பிறக்கும்.

**ல், ள்**

**84.அண்பல் முதலும் அண்ணமும் முறையின்**
**நாவிளிம்பு வீங்கி ஒற்றவும் வருடவும்**
**லகார ளகாரம் ஆயிரண்டும் பிறக்கும்.**



Scanned by CamScanner

Scanned by CamScanner

மேல்வாய்ப் பல்லின் அடியை நாக்கின் ஓரமானது தடித்து நெருங்க (ஒற்ற) லகரமும் நாக்கின் ஓரம் வீங்கி வருட ளகரம் ஆயிரண்டும் பிறக்கும்.

நாவிளிம்பு வீங்கி முதலண்ணத்தை ஒற்ற – ல

நாவிளிம்பு வீங்கி அண்ணத்தை வருட – ள

வ்

**85.மேற்பல் இதழ்உற மேவிடும் வவ்வே.**

மேல்வாய்ப் பல் கீழ் உதட்டைப் பொருந்த வ் பிறக்கும்.

ற், ன்

**86.அண்ணம் நுனிநா நனிஉறின் றனவரும்.**

மேல் வாயாகிய அண்ணத்தை நாக்கின் நுனி மிகப் பொருந்தின் ற், ன் பிறக்கும்.

## சார்பெழுத்துக்களின் பிறப்பு

**87.ஆய்தக்கு இடம்தலை அங்கா முயற்சி**

**சார்பெழுத்து ஏனவும் தம்முதல் அனைய.**

ஆய்தத்திற்கு பிறப்பிடம் தலை.வாயைத் திறக்கும் முயற்சியால் பிறக்கும்.ஆய்தம் தவிர மற்ற சார்பெழுத்துக்கள் அனைத்தும் சார்ந்துவரும் தத்தம் முதலெழுத்துக்களின் பிறப்பினையே பொருந்தி வரும்.

## எழுத்துக்களின் பிறப்பிற்குப் புறனடை

**88.எடுத்தல் படுத்தல் நலிதல் உழப்பில்**

**திரிபும் தத்தமில் சிறிதுள ஆகும்.**

பல எழுத்துக்களுக்கு பிறப்பு ஒன்றாகச் சொல்லப்பட்டதெனினும் உயர்த்திக் கூறுதல், தாழ்த்திக் கூறுதல்.உயர்த்தியும் தாழ்த்தியும் கூறுதல் ஆகிய முயற்சியால் ஒன்றற்கு ஒன்று பிறப்பு வேறுபாடுகளும் சிறிது சிறிது உள்ளனவாம்.



Scanned by CamScanner

Scanned by CamScanner

89. புள்ளிவிட்டு அவ்வொடு முன்னுரு ஆகியும்
ஏனை உயிரோடு உருவு திரிந்தும்
உயிர்அள வாயதன் வடிவுஒழித்து இருவயின்
பெயரோடும் ஒற்று முன்னாய்வரும் உயிர்மெய்

1.மெய்யெழுத்துக்கள் பதினெட்டும் அகரத்தோடு சேரும் போது புள்ளியை விட்டு பழைய உருவத்தையே பெறும்.2.அகரம் தவிர பிற எழுத்துக்களுடன் சேரும் போது வெவ்வேறு வடிவத்தை பெறும்.3.தன் மாத்திரை அளவில் தோன்றாது உயிரெழுத்தின் மாத்திரை அளவையே பெறும்.4.தான் சார்ந்த உயிரின் வடிவத்தை விட்டு திரிந்து தன் வடிவத்தையே வடிவமாக பெறும். 5.உயிர், மெய் இரண்டிடத்தும் பிறந்து உயிர்மெய் எனப் பெயர் பெறும். 6.உயிர்மெய் எழுத்தை ஒலிக்கும் போது மெய்யொலி முன்னும் உயிரொலி பின்னுமாக ஒலிக்கும்.

அகரத்தோடு சேரும் போது புள்ளியை இழந்து தன் வடிவைப் பெறுதல்.

க, ங, ச, ஞ, ட, ண, த, ந, ப, ம, ய, ர, ல, வ, ழ, ள, ற, ன

மற்ற உயிரோடு சேரும் போது வடிவம் மாறுதல்.

கா, கி, கீ, கு, கூ, கெ, கே, கை, கொ, கோ, கௌ

க் + அ = க          க் + ஆ = கா

உயிரும் மெய்யும் சேர்வதால் மெய்யின் ஒலி முன்னும் உயிரின் ஒலி பின்னுமாக ஒலித்தல்.

## ஆய்தம் (8)

90. குறியதன் முன்னர் ஆய்தப் புள்ளி
உயிரோடு புணர்ந்த வல்லாறன் மிசைத்தே.

முக்கூட்டுப் புள்ளியை உடைய ஆய்தம் குறில் எழுத்தின் முன்னரும் உகரத் தோடு கூடிய வல்லெழுத்துக்களின் மேலதாய் வரும். இதுவே முற்றாய்தம் எனப்படும்.



Scanned by CamScanner
Scanned by CamScanner

வல்லினம் இறுதியாக வந்த ஆய்தம் - 6

எஃகு, கஃசு, கஃடு, அஃது, கஃபு, பஃறு

எழுத்துக்கள் திரிந்து ஆய்தமாதல்

அல் + கடிய - அஃகடிய

எழுத்து திரிந்து ஆய்தமாதல்

இருபது - இருபஃது

## அளபெடை

### உயிரளபெடை (21)

**91. இசைகெடின் மொழிமுதல் இடைகடை நிலைநெடில்**

**அளபுஎழும் அவற்றுஅவற்று இனக்குறில் குறியே.**

செய்யுளில் ஓசை குறைகின்ற விடத்து அவ்விடத்தில் சொல்லுக்கு முதலினும் இடையினும் ஈற்றினும் நின்ற நெட்டெழுத்துக்கள் ஏழும் அவ்வோசையை நிறைவிக்கத் தத்தம் மாத்திரை அளவிலிருந்து நீண்டு ஒலிக்கும். அளபெடுத்தமைக்கு குறில் எழுத்துக்களை அடையாளமாகப் பெறும்.

நெட்டெழுத்துக்கள் ஏழும் மொழி முதல், இடை, கடையில் அளபெடுத்தல்.

இவற்றுள் ஔகாரம் மொழி இடை, கடையில் வராதமையால் இரண்டைக் கழித்தால் 19 ஆகும். இன்னிசை அளபேடை, சொல்லிசை அளபெடை இரண்டையும் கூட்ட உயிரளபெடை 21 ஆகும்.

### ஒற்றளபெடை (42)

**92. ஙஞணநமன வயலள ஆய்தம்**

**அளபாம் குறிலிணை குறிற்கீழ் இடைகடை**

**மிகலே அவற்றின் குறியாம் வேறே.**

செய்யுளில் ஓசை குறைகின்ற விடத்து மெல்லினம் ஙஞணநமண ஆறும் வயலள ஆகிய இடையின எழுத்துக்கள் நான்கும் ஆய்தம் ஆகிய பதினொன்று எழுத்தும் அளபெடுக்கும்.



Scanned by CamScanner

Scanned by CamScanner

அவை குறில் கீழும் குறிலிணைக் கீழும் அளபெடுக்கும். அவ்வாறு அளபெடுக்கும் போது அவை மொழிக்கு இடையிலும் இறுதியிலும் வரும். அளபெடுத்ததன் அடையாளமாக அந்த மெய்களே அருகில் வந்து நிற்கும்.

ஆய்தம் மொழிக்கு இடையில் மட்டுமே அளபெடுக்கும். ஆய்தம் தவிர மீதி பத்து மெய்களும் ஈரிடத்திலும் அளபெடுக்கும்.

| | |
|---|---|
| குறில்கீழ் மொழி இடை | - 10 |
| குறில்கீழ் மொழி கடை | - 10 |
| குறிலிணைக் கீழ் மொழி இடை | - 10 |
| குறிலணைக் கீழ் மொழி கடை | - 10 |
| | 40 |

ஆய்தம்

| | |
|---|---|
| குறில்கீழ் மொழி இடை | - 1 |
| குறிலிணைக்கீழ் மொழி இடை | - 1 |

ஆக ஒற்றளபெடை 42 ஆகும்.

**இலங்ங்கு வெண்பிறை சூடி ஈசனடி யார்க்குக்**
**கலங்ங்கு நெஞ்சமில்லை காண் எனவும்**
**எங்ங் கெனத்திரி வாரின் எனவும்**
**மடங்ங் கலந்த மனனே களத்து**
**விடங்ங் கலந்தானை வேண்டு எனவும்**
**அங்ங் கனிந்த வருளிடத்தார்க் கன்பு செய்து**
**நங்ங் களங்கனுப்பா நாம் எனவும் வரும்.**

**இலங்ங்கு** - குறிலிணைக் கீழ் இடை
**எங்ங்கு** - குறில்கீழ் இடை
**மடங்ங்** - குறிலிணைக்கீழ் கடை
**அங்ங்** - குறில் கீழ் கடை

**விலஃஃகி** வீங்கிரு கேளாட்டுமே மாத
**ரிலஃஃகு** முத்தினம்
**எஃஃகிலங்கிய** கையறா யின்னுயிர்
**வெஃஃகு** வார்க்கில்லை வீடு

**விலஃஃகி** - குறிலிணைக்கீழ் இடை
**எஃஃகி** - குறில் கீழ் இடை



Scanned by CamScanner
Scanned by CamScanner

## குற்றியலிகரம் (37)

93. யகரம் வரக்குறள் உத்திரி இகரமும்
அசைச்சொல் மியாவின் இகரமும் குறிய.

குற்றியலுகரம் நிலைமொழியாய் நிற்கும் போது வரும் மொழி முதல் எழுத்து ய கரமாக இருந்தால் நிலை மொழியின் இறுதி உகரம் இகரமாகத் திரியும். அவ் இகரம் ஒலிக்கின்ற அளவில் குறையும். மியா என்ற அசைச் சொல்லின் முன்னர் இகரம் குறைந்து ஒலிக்கும்.

நாகு + யாது – நாகியாது

வரகு + யாது – வரகியாது

குரங்குயாது – குரங்கியாது

இவை புணர்மொழிக் குற்றியலிகரம் ஆகும். இரு சொற்கள் புணரும் போது தோன்றும் குற்றியலிகரம் – கேண்மியா, சென்மியா – ஒருமொழிக் குற்றியலிகரம். 36 குற்றியலுகரத்தால் அமையும் குற்றியலிகரம் 36 ஒரு மொழிக் குற்றியலிகரம்–1 மொத்தக் குற்றியலிகரம் 37

குற்று + இயல் + இகரம் = குற்றியலிகரம்

குறுகி ஒலிக்கும் இயல்புடைய இகரம். 'இ' தன் ஒரு மாத்திரை அளவிலிருந்து 1/2 மாத்திரையாகத் குறைந்து ஒலிக்குமானால் அது குற்றியலிகரம் எனப்படுகிறது.

## குற்றியலுகரம் (36)

94. நெடிலோடு ஆய்தம் உயிர்வலி மெலி இடைத்
தொடர்மொழி இறுதிவன்மை ஊர் உகரம்.
அஃகும் பிறமேல் தொடரவும் பெறுமே.

நெடில் எழுத்து ஏழும், ஆய்தம் ஒன்றும், உயிரெழுத்துக்கள் ஒள தவிர பதினொன்றும், வல்லினம், மெல்லினம், இடையினம் வகரம் தவிர ஐந்துமாக முப்பத்தாறு எழுத்துக்களுள் ஏதேனும் ஒன்று (வல்லினம் ஊர்ந்து உகரம்) இறுதி எழுத்தாகிய குசுடுதுபுறு ஆகியவற்றிற்கு முன் எழுத்தாக அமையும். வல்லினத்தின் மீது



Scanned by CamScanner

Scanned by CamScanner

உகரம் சேர்ந்து வரும் போது 'உ' தன் மாத்திரை அளவிலிருந்து குறைந்து ஒலிக்கும்.

நாகு, ஈறு, ஊது, – நெடில்தொடர்– 7

சுக்கு, கச்சு, வாத்து – வன்தொடர் – 6

சங்கு, பஞ்சு – மென்தொடர் – 6

சால்பு, பெய்து – இடைத்தொடர் – 5

வரகு, பிறகு – உயிர்த்தொடர் – 11

எஃகு,கஃசு, பஃது – ஆய்தத்தொடர் – 1

36

குற்று + இயல் + உகரம் – குற்றியலுகரம்

குறுகிய இயல்பையுடைய உகரம் மேற்கண்டவாறு 36 வகைப்படும்.

முதலெழுத்து குறிலாக இருந்து அதனையடுத்து குசுடுதுபுறு ஆறில் ஏதேனும் ஒன்று வந்தால் அது முற்றியலுகரம் ஆகும்.

(உம்) பசு, விடு, கொடு, படு போல்வன

குசுடுதுபுறு அகியவற்றிற்கு முன் வருகின்ற எழுத்தை வைத்தே குற்றியலுகரம் வகைப்படுத்தப்பட்டுள்ளது.

## ஐகாரம் குறுக்கம் (3), ஔகாரக் குறுக்கம் (1)

95. தற்சுட்டு அளபுஒழி ஐம்மூ வழியும்
நையும் ஔவும் முதல்அற்று ஆகும்.

தன்னைச் சுட்டுகின்ற போதும் அளபெடுக்கும் போதும் ஐ காரம் குறுகாமல் இரண்டு மாத்திரை அளவில் ஒலிக்கும். சொல்லின் முதல், இடை, கடை ஆகிய மூன்று இடங்களில் வரும்போது தன் மாத்திரை அளவிலிருந்து குறுகி ஒலிக்கும்.

(எ.கா)

ஐவர், ஐப்பசி – மொழி முதல்

வளையல், இடையன், மடையன், கடையன், – மொழி இடை

குவளை, தவளை, தாமரை – மொழிகடை

ஔகாரம் மொழிக்கு முதலில் வரும்போது தன் மாத்திரை அளவிலிருந்து குறைந்து ஒலிக்கும்.

(எ.கா) மௌவல், வௌவால்



Scanned by CamScanner

Scanned by CamScanner

## மகரக் குறுக்கம் (3)

**96. ணனமுன்னும் வஃகான் மிசையும் மக்குறுகும்.**

ணகர, னகரத்தின் முன் வரும் மகரமும் வகரத்தின் முன் வரும் மகரமும் தன் அளவில் இருந்து குறைந்து ஒலிக்கும். (எ.கா)

வெருளினும் எல்லாம் வெருளுமஃ தன்றி
மருளினும் எல்லாம் மருண்ம்.
திசையறி மீகானும் போன்ம்
தரும் வளவன்

மருண்ம்,போன்ம், தரும் வளவன்

மேற்கண்டவாறு மூன்றிடங்களில் மகரம் குறுகும்.

ணனமுன் – என்றது முன்னோக்கி எழுத்துக்கள் செல்லும் நிலையில் முன் என்றார்.

## ஆய்தக் குறுக்கம் (2)

**97. லளஈற்று இயைபின் ஆம் ஆய்தம் அஃகும்.**

தனிக்குறிலை அடுத்து வரும் ல், ள் ஒற்றுக்கள் வரும் சொற்களின் முன்னர் தகரத்தை முதலாக உடைய வருமொழி புணரும் போது ல, ள ஆய்தமாகத் திரியும். அவ்வாறு திரியும் ஆய்தம் தன் மாத்திரை அளவிலிருந்து குறைந்து ஒலிக்கும்.

அல்+திணை – அஃறிணை

முள் + தீது – முஃடீது

மேற்கண்டவாறு ஆய்தக் குறுக்கம் இரண்டும் புணர்மொழி ஆய்தம் என்றும் சுட்டப்படும்.

## எழுத்துக்களின் வடிவம்

**98. தொல்லை வடிவின எல்லா எழுத்தும் ஆண்டு
எய்தும் எகர ஒகரமெய் புள்ளி.**



Scanned by CamScanner
Scanned by CamScanner

எல்லா எழுத்துக்களும் பழைய எழுத்து முறை வடிவ உடையன. அவற்றுள் எகரம் ஒகரம் ஆகிய இரண்டு உயிரெழுத்துக்களும் மெய்யெழுத்துக்கள் பதினெட்டும் புள்ளி பெற்று நிற்கும் வடிவையுடையன.

எ - ஒ - குறில்

## மாத்திரை

௨௯. மூன்று உயிரளபு இரண்டாம் நெடில் ஒன்றே
குறிலோடு ஐஔக் குறுக்கம் ஒற்றளபு
அரை ஒற்று இஉக் குறுக்கம் ஆய்தம்
கால்குறள் மஃகான் ஆய்தம் மாத்திரை.

மாத்திரை அளவுகள் கீழ்க்கண்டவாறு வகுக்கப்படுகிறது.

உயிரளபெடை - 3 மாத்திரை

நெடில் - 2 மாத்திரை

குறில், ஐகாரக் குறுக்கம், ஔகாரக் குறுக்கம், ஒற்றளபெடை - 1 மாத்திரை

மெய், குற்றியலிகரம், குற்றியலுகரம் - 1/2 மாத்திரை

ஆய்தம், மகரக் குறுக்கம், ஆய்தக் குறுக்கம் - 1/4 மாத்திரை

ஐகாரக் குறுக்கம் மொழிக்கு முதலில் 1 1/2 மாத்திரை அளவில் ஒலிப்பதுண்டு. குறில், நெடில் மாத்திரை அளவையே உயிர் மெய் குறிலும் உயிர்மெய் நெடிலும் பெறும்.



Scanned by CamScanner

Scanned by CamScanner

## மாத்திரை

100. இயல்பெழு மாந்தர் இமைநொடி மாத்திரை.

மக்கள் இயல்பாகக் கண்ணை இமைப்பதற்கு ஆகும் காலஅளவும் கை நொடிப்பதற்கு ஆகும் கால அளவும் ஒரு மாத்திரை எனப்படும்.

உன்னல் காலே ஊன்றல் அரையே

முறுக்கல் முக்கால் விடுத்தல் ஒன்றே.

என யாப்பெருங்கலக் நொடித்தலுக்கான கால அளவைப் பகுத்துக் காட்டுகின்றது.

## மாத்திரைக்குச் சிறப்பு விதி

101. ஆவியும் ஒற்றும் அளவிறந்து இசைத்தலும்

மேவும் இசைவிளி பண்டமாற்று ஆதியின்.

உயிரெழுத்துக்களும் மெய்எழுத்துக்களும் மேற்சொன்ன மாத்திரை அளவைக் கடந்து ஒலிக்கின்ற இடங்களும் உண்டு. அதாவது இசைக்கின்ற போதும், தூரத்தில் இருப்போரை அழைக்கின்ற போதும் கூவி விற்கின்ற போதும் புலம்பும் போதும் எழுத்துக்கள் தன் அளவை விட கடந்து ஒலிக்கும். இசைக்கின்றவிடத்து உயிர் பன்னிரண்டு மாத்திரை வரை ஒலிக்கும் என்று இசை நூலார் கூறுவர்.

## மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்கள்

102. பன்னீர் உயிரும் கசதந பமவய

ஞஙஈரைந்து உயிர் மெய்யும் மொழி முதல்.

பன்னிரண்டு உயிர் எழுத்துக்களும் க ச த ந ப ம வ ய ஞ ங ஆகிய பத்து உயிர்மெய் எழுத்துக்களும் மொழிக்கு முதலில் வரும்.

(எ.கா)

அம்மா, ஆடு, இலை, ஈ, உடுக்கை, ஊஞ்சல், எலி, ஏணி, ஐவர், ஒட்டகம், ஓணான், ஔவையார்.

உயிர் தனித்த உயிராகவே மொழிக்கு முதலில் வரும். மெய்யெழுத்துக்கள் மெய்யாக வராது. உயிருடன் கூடி உயிர்மெய்யாக மொழிக்கு முதலில் வரும்.

மொழி முதல் – ஒரு சொல்லின் முதல் எழுத்தாக வருதல்.



Scanned by CamScanner
Scanned by CamScanner

## மொழி முதல் மெய்களுக்குச் சிறப்பு விதி

**103. உ ஊ ஒ ஓ அலவொடு வம்முதல்.**

உ, ஊ, ஒ, ஓ என்னும் நான்கு இதழ் குவி உயிர்களோடு சேர்ந்து வகரம் மொழிக்கு முதலில் வராது. மீதமுள்ள எட்டு உயிர்களோடும் சேர்ந்து வரும்.

(எ.கா)

வயிறு, வாளி, விறகு, வீடு, வெற்றி, வேலை, வைகை, வௌவுதல், என வரும்.

### யகரம் மொழி முதலில்

**104. அ ஆ உ ஊ ஒ ஔ யம்முதல்.**

அ, ஆ, உ, ஊ, ஓ, ஔ ஆகிய ஆறு உயிரோடும் சேர்ந்து யகரம் மொழிக்கு முதலில் வரும்.

யவனர், யானை, யுகம், யூகம், யோகி, யௌவனம், என வரும்.

தொல்காப்பியர் "ஆ வோடல்லது யகரம் மொழி முதலாகா" என்கிறார். ஆ காரத்தோடு சேர்ந்து மட்டுமே வரும். பிற்காலத்தில் வடமொழிக்கலப்பு தோன்றிய காலத்தில் இலக்கணம் படைத்த நன்னூலார் ஆறு உயிரோடு சேர்ந்து வரும் என்கிறார்.

### ஞகரம் மொழி முதலில்

**105. அ ஆ எ ஒவ்வோடு ஆகும் ஞம்முதல்.**

அ, ஆ, எ, ஒ என்னும் நான்கு உயிரோடு சேர்ந்து ஞகரம் மொழிக்கு முதலில் வரும். ஞமலி (நாய்), ஞாலம் (உலகம்), ஞெகிழி, (தீப்பொறி) ஞொள்குதல் (இளைத்தல்) என வரும்.

அ, எ, ஒ மூன்றுடன் சேர்ந்து மொழிக்கு முதலில் வரும் என்கிறார் தொல்காப்பியர்.

### ஙகரம் மொழி முதலில்

**106. சுட்டு யா எகர வினாவழி அவ்வை**
**ஒட்டி ஙவ்வும் முதல் ஆகும்மே.**

அ, இ, உ ஆகிய சுட்டெழுத்துக்களுடனும் யா, எ என்ற வினா எழுத்துக்களுடனும் சேர்ந்து 'ங' காரம் மொழிக்கு முதலில் வரும். அங்ஙனம், இங்ஙனம், உங்ஙனம், யாங்ஙனம், எங்ஙனம்.



Scanned by CamScanner

Scanned by CamScanner

ஙணம் - இடம்

இடத்தையும், தன்மையையும் உணர்த்தும் பல பொருள் ஒரு சொல்.

## மொழி முதல் எழுத்துக்கள்

| | | |
|---|---|---|
| உயிர் | - | 12 |
| மெய் | - | 10 |
| | | 22 |

முப்பது முதலெழுத்துக்களில் 22 எழுத்துக்கள் மொழிக்கு முதலில் வரும்.

## மெய் பத்தும் உயிர்மெய்யாய் முதலில் வருதல்

| | | | |
|---|---|---|---|
| வல்லினம் - | கசதப | - | 4 |
| மெல்லினம் - | ஙஞநம | - | 4 |
| இடையினம் - | ய,வ | - | 2 |

12 உயிரோடும் சேர்ந்து உயிர் மெய்யாய் மொழிக்கு முதலில் வருபவை.

| | | |
|---|---|---|
| க,ச,த,ந,ப,ம | - 6 X 12 = | 72 |
| ங | - 1X1 = | 1 |
| ஞ | - 1X4 = | 4 |
| ய | - 1X6 = | 6 |
| வ | - 1X8 = | 8 |
| | | 91 |
| | உயிர் = | 12 |
| | மொத்த எழுத்துக்கள் = | 103 |

## மொழி இறுதி எழுத்துகள்

107. ஆவி ஞணநமன யரலவ ழளமெய்
    சாயும் உகரம் நாலாறும் ஈறே.

பன்னிரண்டு உயிரும் தனித்தும் உயிர்மெய்யாகவும் ஞ் ண் ந் ம் ன் ய் ர் ல் வ் ழ் ள் ஆகிய பதினோரு மெய்யும் தனித்த மெய்யாக மொழிக்கு இறுதியாக வரும்.



Scanned by CamScanner
Scanned by CamScanner

நாலாறு - 4 X 6 = 24

சாயும் உகரம் - அளவில் குறையும் உகரம் குற்றியலுகரம்.

ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ என ஓரெழுத்து ஒரு மொழியாக வரும் போது முதலும் இறுதியும் ஆகும்.

விள, பலா, உரி, தீ, கரு, பூ, சே, தே, தை, நொ, போ, கௌ என உயிர் மெய் எழுத்தாகவும் வரும்.

உரிஞ், மண், பொருள், மரம், பொன், வேய், வேர், வேல், தெவ், வீழ், வாள், மொழி இறுதி எழுத்துக்கள்.

| | | |
|---|---|---|
| உயிர் | - | 12 |
| மெய் | | |
| மெல்லினம் | - | 5 |
| இடையினம் | - | 6 |
| கு.உகரம் | - | 1 |
| | | 24 |

வல்லினம் ஆறும் மெல்லினத்தில் ஙு வும் தவிர மீதமுள்ள பதினொரு மெய்யும் மெய்யாகவே மொழிக்கு இறுதியில் வரும்.

**108. குற்றுயிர் அளபின் ஈறாம் எகரம்**
**மெய்யோடு ஏலாது ஒந்நவ்வொடு ஆம்ஔ**
**ககர வகரமொடு ஆகும் என்ப.**

உயிர் எழுத்துக்களில் குறில் எழுத்துக்கள் அளபெடையின் போது நெடிலுக்கு அருகில் நின்று தனித்த உயிராக மொழிக்கு இறுதியாக வரும். எகரம் எந்த மெய்யுடன் கூடியும் மொழிக்கு இறுதியாக வராது. ஒகரம் நகர மெய்யுடன் கூடி மட்டுமே இறுதியில் வரும். ஔ காரம் க,வ வோடு இணைந்து இறுதியில் வரும்.

அளபெடையில் குறில் உயிர் இறுதியில் வரல் :-

(எ.கா) பலாஅ, நீஇ, பூஉ, சேஎ, கைஅ, கோஒ, கௌஉ,

உயிர்மெய்யாய் வரல்:-

ஒ - ந கரத்துடன் கூடி நொ எனவரும்

ஔ - க வ உடன் கூடி கௌ வௌ எனவும் வரும்.

நொ – துன்பப்படு, கௌ – வாயால் பற்று, வௌ – கொள்ளை

உயிர்மெய் எழுத்தினது முதலும் பெறும்.



Scanned by CamScanner
Scanned by CamScanner

109. நின்ற நெறியே உயிர்மெய் முதல் ஈறே.

மெய் முன்னும் உயிர்பின்னும் ஒலித்து நின்ற வழியே உயிர்மெய் எழுத்துக்களுக்கு மெய் முதலாகும் உயிர் ஈறாகும்.

## இடை நிலை மெய்மயக்கம்

110. கசதப ஒழித்த ஈரேழன் கூட்டம்
மெய்ம்மயங்கு உளிடலை ரழ ஒழித்து ஈரெட்டு
ஆகும் இவ்இருபான் மயக்கும் மொழியிடை
மேவும் உயிர்மெய் மயக்கு அளவு இன்றே.

கசதப என்னும் நான்கு மெய்கள் நீக்கிய மீதமுள்ள பதினான்கு மெய்களும் பிற மெய்களோடு சேரும். ர ழ தவிர மீதிப் பதினாறு மெய்களும் தம்முடன் தாம் சேர்வது உடன் நிலை மெய் மயக்கம் ஆகும். இவ்விரு வகை மயக்கமும் ஒரு மொழிக்கும் தொடர் மொழிக்கும் நடுவில் மயங்கும் மயக்கத்திற்கு வரையறை இல்லை.

கூட்டம் – எழுத்துக்களின் கூட்டம்

மயக்கம் – வடிவம் திரிபடைந்து வேறு எழுத்தாக வரல்.

கசதப – நான்கும் தம்முடன் தாமும் மயங்கும் பிற 14 மெய்களுடனும் மயங்கி வரும்.

வேற்றுநிலை மெய்மயக்கம்:

பட்சி, கற்க, அங்கு, மஞ்சு, மாண்பு, பந்து, பாம்பு, கன்று, வெய்து, வேர்கடிது, சால்பு , தெவ்கடிது, வீழ்கடிது, வாள்கடிது.

ஒரு மெய்க்கு அருகில் ஒரு மெய் உயிர் மெய்யாக வருதல். எல்லா மெய்க்கு அருகிலும் எல்லா மெய்யும் இணைவதில்லை. அதற்கும் சில வரையறை உண்டு.

தம்முடன் தாம் மயங்குபவை – க ச த ப

காக்கை, பச்சை, தாத்தா, பாப்பா

தம்முடன் பிற மயங்குபவை – ங, ஞ, ட, ண, ந, ம, ய, ல, வ, ள, ற, ன

| தம்முன்தாம் | | தம்முன்பிற |
|---|---|---|
| அங்ஙனம் | – | அங்கு |
| மஞ்ஞை | – | மஞ்சள் |



Scanned by CamScanner

Scanned by CamScanner

| | | |
|---|---|---|
| பட்டு | - | வண்டுவண்ணம்-வண்டு |
| வெந்நீர் | - | பந்து |
| அம்மா | - | பம்பரம் |
| அய்யன் | - | வெய்து |
| கொல்லி | - | சால்பு |
| அவ்வை | - | தெவ்யாது |
| வெள்ளம் | - | வாள்கடிது |
| கொற்றம் | - | கொற்கை |
| அன்னம் | - | கன்று |

**111. ஙம்முன் கவ்வாம் வம்முன் யவ்வே**

ங முன் க வும் வ முன் ய வும் மயங்கும்.

ங முன் க - கங்கன்

வ முன் ய - தெவ்யாது

**112. ஞ ந முன் தம்மினம் யகரமொடு ஆகும்.**

ஞ,ந மெய்களின் முன் அவற்றிற்கு இன மெய்களாகிய சகரமும் தகரமும் ய வும் மயங்கும்.

ஞ - பஞ்சு, உரிஞ்யாது

ந - பந்து, பொருந்யாது

**113. டறமுன் கசப மெய்யுடன் மயங்கும்.**

ட,ற எழுத்துக்களின் முன் க ச ப என்னும் மூன்றெழுத்தும் மயங்கும்.

ட - கட்கம், கட்சி, சுட்பம்

ற - கற்க, கற்சிலை, கற்பகம்

**114. ணனமுன் இனம் கசஞபமய வவ் வரும்.**

ண,ன என்னும் மெய்களின் முன் அவற்றிற்கு இனமாகிய ட,ற மெய்களும் க ச ஞ ப ம ய வ ஆகிய ஏழு மெய்களும் மயங்கும்.



Scanned by CamScanner
Scanned by CamScanner

ண - டகசஞபமயவ - 8 மெய்கள் மயங்கும்

ன - றகசஞபமயவ - 8 மெய்கள் மயங்கும்

ண் - பண்டு, மண்கலம், வெண்சாமரம், வெண்ஞமலி, வெண்பல், வெண்மலர், மண்யாது, மண்வலிது.

ன் - கன்று, புன்கண், புன்செய், பொன்ஞாலம், பொன்பயிர், பொன்மலர், பொன்யாது, பொன்வடிவு

**115. மம்முன் பயவ மயங்கும் என்ப.**

மகர மெய் முன் ப,ய,வ ஆகிய மூன்று மெய்களும் மயங்கும்.

ம - ப,ய,வ மூன்றும் உயிர்மெய்யாய் வரும்.

ம - கம்பலை, கலம்யாது, கலம்வலிது

**116. ய ர ழ முன்னர் மொழி முதல் மெய் வரும்.**

ய,ர,ழ என்னும் மூன்று மெய்களின் முன்னர் மொழிக்கு முதலில் வரும் பத்து மெய்களும் மயங்கி வரும்.

ய,ர,ழ - க ச த ப ங ஞ ந ம ய வ ஆகிய பத்து மெய்களும் வரும்.

யரழ - க - வெய்கடிது, வேர்கடிது, வீழ்கடிது

யரழ - ச - வேய்சிறிது, வேர்சிறிது, வீழ்சிறிது

யரழ - த - வேய்தீது, வேர்தீது, வீழ்தீது

யரழ - ப - வேய்பெரிது, வேர்பெரிது, வீழ்பெரிது

யரழ - ஞ - வேய்ஞான்றது, வேர்ஞான்றது, வீழ்ஞான்றது

யரழ - ம - வேய்மாண்டது, வேர்மாண்டது, வீழ்மாண்டது

யரழ - ய - வேய்யாது, வேர்யாது, வீழ்யாது

யரழ - வ - வேய்வலிது, வேர்வலிது, வீழ்வலிது

யரழ - ங - வேய்ஙனம், வேர்ஙனம், வீழ்ஙனம்

**117. லளமுன் கசப வய ஒன்றும்மே.**

ல்,ள் என்னும் மெய்களின் முன் க, ச, ப, வ, ய என்னும் மெய்கள் மயங்கும்.

(எ.கா) ல,ள - க - செல்க, கொள்க



Scanned by CamScanner

Scanned by CamScanner

ல,ள - ச - வேல்சிறிது, வாள்சிறிது
ல,ள - ப - செல்ப, கொள்ப
ல,ள - வ - கொல்வளை, சொல்வளை
ல,ள - ய - கொல்யானை, வெள்யானை

## உடனிலை மெய்மயக்கம்

**118. ரழ அல்லன தம்முன் தாம் உடன் நிலையும்.**

ர,ழ அல்லாத பிற பதினாறு மெய்களும் தம்முன் தாம் மயங்கும். (எ.கா)

தேக்கம், அங்ஙனம், பச்சை, மஞ்ஞை, பாட்டு, பண்ணை, தத்தை, செந்நீர், தோப்பு, அம்மா, வெய்யர், கொல்லி, எவ்வி (பீச்சுக்குழல்), வெள்ளி, வெற்றி, கன்னி.

**ஈரொற்று உடன்நிலை, தனிக்குறிலின் கீழ் வராத ஒற்றுக்கள்.**

**119. யரழ ஒற்றின் முன் க ச த ப ங ஞ ந ம**
**ஈரொற் றாம்ரழத் தனிக்குறில் அணையா.**

ய் ர் ழ் என்னும் மூன்று மெய்களின் முன் க் ச் த் ப் ங் ஞ் ந் ம் ஆகிய மெய்கள் ஈரொற்றாக வந்து நிற்கும்.

ர,ழ ஆகிய இரண்டும் தனிக்குறிலின் கீழ் ஒற்றாக வராது, நெடிலின் கீழ் வரும்.

முன்னர் சொல்லப்பட்டது மெய்யின் பின்னர் மெய்யாக வராமல் உயிர்மெய்யாகவும் திரிந்து வருதல் மெய் மயக்கம்.

ஒரு மெய்யின் பின்னர் ஒருமெய் மெய்யாகவே வந்து நிற்றல் ஈரொற்று உடன்நிலை.

அஃதாவது இரண்டு ஒற்றுக்கள் உடன் இணைந்து வருதல்.

**ய்**

வாய்க்கால், வேய்ங்குழல், மேய்ச்சல், மெய்ஞ்ஞானம், காய்த்தல், பாய்ந்தது, வாய்ப்பு, செய்ம்மென.

**ர்**

பார்க்கிறான், ஆர்ங்கோடு, (அத்திமரக்கிளை) உயர்ச்சி, பார்த்தான், ஊர்ந்து, பார்ப்பு, ஞ்,ம் வழக்கில் இல்லை.

**ழ்**

வாழ்க்கை, பாழ்ங்கிணறு, வீழ்ச்சி, வாழ்த்து, வாழ்ந்து, தாழ்ப்பாள். ஞ்,ம் வழக்கில் இல்லை.



Scanned by CamScanner
Scanned by CamScanner

ர,ழ இரண்டும் நெடிலின் பின்னரே ஒற்றாக வரும்.

கார், வீழ்

பார், பாழ்

மேற்கண்டவாறு நெடிலின் பின் வரும்.

## மெய் திரிந்து இரண்டு ஒற்றாய் நிற்றல்

**120. ளமெய் திரிந்த னணமுன் மகாரம்**
**நைந்துஈர் ஒற்றாம் செய்யுள் உள்ளே.**

செய்யுளில் ல,ள மெய்கள் திரிந்து ன,ண என்னும் மெய்களாக மாறும். இம்மெய்களின் முன் வரும் மகர மெய் குறுகி ஈரொற்றாய் நிற்கும்.

(எ.கா)

திசையறி மீகானும் போன்ம் எனவும்
மயிலியல் மாதர் மருண்ம் எனவும் வரும்.
போலும் என்பது போன்ம்
மருளும் என்பது மருண்ம்

## முதல், இடை, இறுதிநிலை எழுத்துகளுக்குப் புறனடை

**121. தம்பெயர் மொழியின் முதலும் மயக்கமும்**
**இம்முறை மாறியும் இயலும் என்ப.**

எழுத்துக்களின் பெயரைச் சொல்லி நிலை மொழி வருமொழி புணர்க்கப்படும் போது, முதல், இறுதி, இடைநிலை எழுத்துக்களுக்கும் கூறப்பட்ட வழிகளில் இருந்து மாறி அமைபவையும் உண்டு என்று சொல்லுவர்.

(எ.கா)

"லளஃகான் முன்னர் யவ்வும் தோன்றும்" என்று கூறும்போது மொழிக்கு முதலில் வராது என்று சொன்ன லகாரம் முதலில் வந்துள்ளது. கூறப்பட்ட முறைக்கு மாறாக லள மயங்கி வந்துள்ளது. தம்பெயரைச் சொல்லிய விடத்து விதிகள் மாற்றம் பெறும்.



Scanned by CamScanner
Scanned by CamScanner

கடைப்போலி

122. மகர இறுதி அஃறிணைப் பெயரின்
னகரமொடு உறழா நடப்பன உளவே.

பால்பகா அஃறிணைப் பெயரின் இறுதியாக நிற்கும் மகர மெய் னகர மெய்யாய் வந்து அம்மெய்யை ஒத்து நடக்கும்.

அகம் - அகன், நிலம் - நிலன்

பிற எழுத்துக்கள்

சுரும்பு - சுரும்பர்

குற்றியலுகரத்திற்கு அர் போலியாக வந்துள்ளது.

சுரும்பு - வண்டு, சுரும்பர் வண்டர்

அதேபோல் சாம்பல் - சாம்பர், பந்தல் - பந்தர்

லகரத்திற்கு ர் போலியாக வந்துள்ளது.

முதற்போலி, இடைப்போலி

123. அஐ முதல் இடை ஒக்கும் சஞய முன்

ச,ஞ,ய என்னும் எழுத்துக்களுக்கு முன் அ,ஐ என்பவை முதலிலும் நடுவிலும் வேற்றுமையின்றி ஒன்றுபோல் நடக்கும்.

(எ.கா) முதற்போலி

பசல் - பைசல்
மஞ்சு - மைஞ்சு } அ,ஐ ஆகி ஒன்றே போல் நின்றது.
மயல் - மையல்

அமச்சு - அமைச்சு
இலஞ்சி - இலைஞ்சி } சொல்லின் இடையில் அ,ஐ ஆக நின்றது.
அரயர்-அரையர்

ஒரு எழுத்து வர வேண்டிய இடத்தில் மற்றொரு எழுத்து வந்து பொருள் மாற்றம் ஏற்படாமல் இருப்பின் அது போலி.

இடைப்போலி

124. ஐகான் யவ்வழி நவ்வொடு சில்வழி
ஞஃகான் உறழும் என்மரும் உளரே.

ஐ என்னும் உயிரெழுத்தின் பின்னரும் ய் என்னும் மெய்யெழுத்தின் பின்னரும், ஞகரமாக நகரம் சொற்களின் இடையில் உறழ்ந்து வரப்பெறும் என்று கூறுவாரும் உளர்.



Scanned by CamScanner
Scanned by CamScanner

| | | | |
|---|---|---|---|
| மைந்நின்ற | - | மைஞ் ஞின்ற | ஐ யின் பின் ந கரம் ஞகரமாதல் |
| ஐந்நூறு | - | ஐஞ்நூறு | |
| செய்ந்நின்ற | - | செய்ஞ்நின்ற | ய வின் பின் நகரம் ஞ கரமாதல். |
| சேய்நலூர் | - | சேய்ஞலூர் | |

## ஐ,ஔ காரங்களுக்கு போலி

**125. அம்முன் இகரம் யகரம் என்று இவை**
**எய்தின் ஐஒத்து இசைக்கும் அவ்வொடு**
**உவ்வும் வவ்வும் ஔவோர் அன்ன.**

அகரமும் இகரமும் கூடி ஐ போல ஒலிக்கும். அகரமும் யகரம் கூடியும் ஐ போல ஒலிக்கும். அகரமும் உகரமும் கூடி ஔ போல ஒலிக்கும். அகரமும் வகரமும் கூடியும் ஔ போல ஒலிக்கும்.

அ+இ = - ஐயா்,
அ+ய் = - அய்யா்
அ+உ+ஔ = ஔவை
அ+வ்+அவ = அவ்வை ) 5-10-24

## சாரியை

### எழுத்துச் சாரியைகள்

**126. மெய்கள் அகரமும் நெட்டுயிர் காரமும்**
**ஐஔ கானும் இருமைக் குறில்இவ்**
**இரண்டொடு கரமும் சாரியை பெறும் பிற.**

மெய்கள் அனைத்தும் அகரச் சாரியை பெறும். நெடில் உயிர்கள் ஏழும் காரச் சாரியை பெறும். நெட்டெழுத்துக்களில் ஐ,ஔ இரண்டும் கான் சாரியையும் பெறும். குறில் எழுத்துக்கள் காரம், கான் சாரியை பெறுவதோடு கரச் சாரியையும் பெறும்.

1. மெய்யெழுத்துகள் அகரச்சாரியை பெறுதல்.

க் – ககரம்
ங் – ஙகரம்

2. நெடில் உயிர் – ஆகாரச் சாரியை பெறுதல்.

ஆகாரம், ஈகாரம், ஔகாரம்

3. உயிர்க் குறில்

காரம், கான், கரம் – அகாரம், அஃகான், அகரம்

4. உயிர்மெய்க் குறில்

மகாரம் – மஃகான், மகரம்.



Scanned by CamScanner
Scanned by CamScanner

குறில் எழுத்துக்கள் கான் சாரியை பெறும் போது இடையில் ஆய்தம் பெறும். அஃகான், மஃகான், என வரும்.

தனித்தனியே நிற்கும் இரு சொற்களைச் சேர்க்கும் பொழுது (புணர்ச்சி) இணைக்க முடியாத நிலையில் அவ்விடத்தில் இணைப்பதற்கு சாரியைகள் பயன்படுகின்றன. சாரியைகள் சொற்சாரியைகள் எனப்படும். எழுத்துக்களைச் சொல்லுவதற்கும் எழுதுவதற்கும் பயன்படக்கூடிய சாரியைகள் எழுத்துச் சாரியைகள் எனப்படும்.

## எழுத்தியலுக்குப் புறனடை

**127.மொழியாய்த் தொடரினும் முன்அனைத்து எழுத்தே.**

எழுத்துக்கள் மொழியாயினும் அம்மொழி தம்மொடும் உருபொடும் புணர்ந்தாலும் அவை முன் சொல்லப்பட்ட பத்து இலக்கணத்தையும் உடையனவாகும்.

எண் முதல் போலி ஈறாகச் சொல்லப்பட்ட பத்து இலக்கணங்கள்.

### எழுத்தியல் முற்றிற்று



Scanned by CamScanner

Scanned by CamScanner

# பதவியல்

முற்பகுதியில் கூறப்பட்ட எழுத்துக்கள் இணைந்து பதமாதல் பற்றிக் கூறப்படுவதால் இவ்வியல் பதவியல் ஆயிற்று. பதம், சொல், கிளவி, மொழி அனைத்தும் ஒரு பொருள் தரும் பல சொற்களாகும்.

## பதம்

எழுத்துக்கள் தனித்து நின்றோ இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட எழுத்துக்கள் தொடர்ந்து நின்றோ பொருள் தரின் அது பதமாகும். இப்பதம் பகுபதம், பகாபதம் என இருவகைப்படும்.

## ஓரெழுத்து ஒருமொழிகள் (42)

ஓரெழுத்து தனித்து நின்று பொருள் தருமாயின் அது சொல் ஆவதற்குத் தகுதியுடையவையாகின்றன. அவ்வாறு பொருள் தரும் தகுதியுடையவை ஓரெழுத்து ஒரு மொழிகள் ஆகும். உயிர்நெடில் - 6, ம வரிசை 6, த வரிசை 5, ந - 5, ப - 5, க - 4, வ - 4, ச - 4, ய - 1 நாற்பதும் நெடில் வரிசையில் அமைந்த ஓரெழுத்து ஒரு மொழிகள். உயிர்மெய்க்குறில் து,நொ இரண்டும் ஆக நாற்பத்தி இரண்டு ஓரெழுத்து ஒரு மொழிகள் ஆகும்.

## தொடர்மொழிகள்

இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட எழுத்துக்கள் சேர்ந்து நின்று பொருள் தருவது தொடர்மொழிகள் ஆகும்.

## பகாப்பதம்

பிரிக்கப்படுவதால் பயனின்றி இடுகுறியாய் நிற்கும். அஃதாவது பிரிப்பின் பொருளில்லாமல் அமைவது. இவை பெயர்பகாப்பதம், வினைப்பகாபதம், இடைப்பகாப்பதம், உரிப்பகாப்பதம் என அமையும்.

## பகுபதம்

பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் ஆகியவற்றை இடமாகக் கொண்டு அமையும். பெயர்ச் சொற்கள், தெரிநிலையாகவும் குறிப்பாகவும் காலத்தைக் காட்டும் வினைச் சொற்கள் இவை பகுபதங்களாகும்.

## பகுபத உறுப்புக்கள்

தொடர் மொழியைப் பகுத்தால் கிடைக்கும் சொற்கள் பகுபத உறுப்புக்கள் எனப்படும். அவை பகுதி, விகுதி, இடைநிலை, சந்தி, சாரியை, விகாரம் என ஆறு வகைப்படும். பகுதி முன் நிற்பது. பகுதியை பொருள் மாறுபடச் செய்வது விகுதி. இரண்டிற்கும்



Scanned by CamScanner

Scanned by CamScanner

இடையில் நிற்பது இடைநிலை. பகுதி விகுதி புணர்ப்பில் உறுப்புக்களைச் சார்ந்து அமைவது சாரியை. உறுப்புக்களின் சந்திப்பால் தோன்றும் எழுத்து சந்தி. சந்தி அடையும் மாறுபாடு விகாரம் ஆகும்.

**பகுதி**

அடிச்சொல், வேர்ச்சொல் எனவும் அழைக்கப் பெறும். இது பண்புப்பகுதிகள், வினைப்பகுதிகள் என அமையும். மை விகுதியையுடைய பண்புப் பெயர்ப் பகுதிகள் 25 ஆகும். இவ் ஈற்று பகுதிகள் புணர்ச்சியில் எட்டு வகையான மாறுபாடுகளை அடையும். 1. இறுதி எழுத்துப் போகும். 2. இடையில் உள்ள உகரம் இகரமாகும். 3. முதலெழுத்து நீட்டம் பெறும். 4. முதலில் உள்ள அகரம் ஐகாரமாகும். 5. தன் ஒற்று இரட்டிக்கும் 6. முன் நின்ற மெய் திரியும் 7. இனம் மிகும் 8. பிறமாறுபாடுகளும் உண்டு.

**வினைப்பகுதிகள்**

வினைப்பகாப்பதச் சொற்கள் தெரிநிலை வினைப்பகுதியாகும். ஏவலாகவும் தன் வினைகளாகவும் இப்பகுதிகள் அமையும். இவை நட,வா,மடி,சீ,விடு,கூ,ஏ,வை, நொ, போ முதலான 23 ஆகும்.

**விகுதி**

திணை,பால், எண், இடம் ஆகியவற்றைக் காட்டி நிற்கும் 37 விகுதிகளை நன்னூலார் குறிப்பிடுகிறார். படர்க்கை 13 விகுதிகள் (ஆண் - 2, பெண் - 2, பலர் - 44 ஒன்றன் - 3 பல விகுதிகள் - 2) தன்மையில் 17 விகுதிகள் (ஒருமை –8, பன்மை – 9) முன்னிலையில் 16 விகுதிகள் (ஒருமை - 3 , பன்மை - 3) வியங்கோள், செய்யும் வினைமுற்று விகுதி, ஆகியனவாகும்.

**இடைநிலை**

பகுதிக்கும் விகுதிக்கும் இடையில் நிற்பது இடைநிலை காலங்காட்டும் இடைநிலைகள். என்று அழைக்கப்படும் த், ட், ற் இன் இறந்த காலம் காட்டும் இடைநிலைகள், கிறு,கின்று, ஆநின்று - நிகழ் காலம் காட்டும் இடைநிலைகள். ப்,வ் - எதிர்காலம் காட்டும் இடைநிலைகள்.



Scanned by CamScanner

Scanned by CamScanner

**வடமொழி ஆக்கம்**

தமிழுக்கும் ஆசிரியத்திற்கும் உரிய பொது எழுத்தால் ஆகி திரிபின்றி அப்படியே தமிழில் வழங்கும் சொற்கள் தற்சமம். தமிழுக்கும் ஆரியத்திற்கும் பொது எழுத்தால் ஆகி ஆரியத்திற்குரிய சிறப்பு எழுத்துக்களாலும் ஆகி தமிழ் ஒலிப்பிற்கேற்ப மாறி வழங்கப்படுவது தற்பவம் ஆகும்.

**தமிழ் ஆரியப் பொது எழுத்துக்கள்**

உயிர் - அ,ஆ,இ,ஈ,உ,ஊ,எ,ஏ,ஐ,ஒ,ஓ,ஔ - 10

(எ,ஏ இல்லை)

மெய் - க ங ச ஞ ட ண த ந ப ம ய ர ல வ ள (15)

(ற,ழ,ன இவை இல்லை)

**தமிழ்ச் சிறப்பெழுத்துக்கள்**

உயிர் - எ,ஒ மெய் ழ,ற,ன

சார்பெழுத்துக்கள் - உயிர்மெய் உயிரளபெடை தவிர மீதம் - 8

**ஆரியத்திற்குரிய சிறப்பெழுத்துக்கள்**

உயிர் - ரு,ரூ,லு,லூ,அம், அஃ - 6

மெய் - க ச ட த ப - வர்க்கம் - 7

ளகரம் முன் 4 பின் 3



Scanned by CamScanner

Scanned by CamScanner

## பதவியல்

எழுத்தியலில் எடுத்து இயம்பப்பட்ட எழுத்துக்களால் ஆகிய சொற்களின் இலக்கணத்தைக் கூறுவதால் இவ்வியல் பதவியலாகும். எழுத்துக்கள் பொருள் தரின் அது பதமாகும். பதம் என்பதற்கு சொல், மொழி, கிளவி என்ற மாற்றுச் சொற்களும் உண்டு. இவை ஒரு பொருள் குறித்து வழங்கப்படும் பலபெயர்கள் ஆகும்.

### பதம் - விளக்கம்

**128. எழுத்தே தனித்தும் தொடர்ந்தும் பொருள்தரின்**
**பதமாம், அதுபகாப் பதம்பகு பதம்என**
**இருபால் ஆகி இயலும் என்ப.**

எழுத்துக்கள் தனித்து நின்றோ இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட எழுத்துக்கள் இணைந்து நின்றோ பொருளைத்தரின் அது பதமாகும். அப்பதம் பகுபதம், பகாபதம் என இரண்டு வகைப்படும். என்று கூறுவர். பதம் என்பது வடமொழிச்சொல்.

வடமொழி இலக்கணத்தைத் தழுவிச் சொல்லப்படுகின்ற காரணத்தினால் பதவியல் எனப்பெயரிடப்பட்டது. எழுத்துக்கள் பொருள் தந்தால் மட்டுமே சொல்லாகும். தொடர்ந்து நின்றும் பொருள் உணர்த்தாவிடின் அவை சொல்லாகாது.

### ஓர் எழுத்து ஒரு மொழிகள் விளக்குக?

**129. உயிர் மவில் ஆறும், தபநவில் ஐந்தும்**
**கவசவில் நாலும் யவ்வில் ஒன்றும்**
**ஆகும் நெடில் நொ,து ஆம்குறில் இரண்டொடு**
**ஓரெழுத்து இயல்பதம் ஆறேழ் சிறப்பின.**

உயிர் எழுத்துக்களில் ஆறும், ம வரிசையில் ஆறும், த,ப,நகர வரிசையில் ஐந்தும் க,வ,ச வரிசையில் நான்கும், யகர வரிசையில் ஒன்றும் ஆக நாற்பது எழுத்துக்களும் நெட்டெழுத்துக்களாகிய ஓரெழுத்து ஒரு மொழிகளாகும். நொ,து ஆகிய இரண்டும் குறில் எழுத்துக்களால் அமைந்த ஓரெழுத்து ஒரு மொழிகளாகும். ஆக ஓரெழுத்து ஒரு மொழிகள் நாற்பத்திரண்டு ஆகும்.



Scanned by CamScanner
Scanned by CamScanner

உயிர் – ஆ,ஈ,ஊ,ஏ,ஐ,ஓ - 6
மகர வரிசை– மா, மீ, மூ, மே, மை, மோ - 6
த – தா, தீ, தூ, தே, தை - 5
ப – பா, பூ, பே, பை, போ - 5
ந – நா, நீ, நே, நை, நோ - 5
க – கா, கூ, கை, கோ - 4
வ – வா, வீ, வை, வௌ - 4
ச – சா, சீ, சே,சோ - 4
ய – யா - 1
குறில் – து,நொ - 2
42

ஆ – பசு – மாமிசம், ஈ – ஈகை, பறக்கும் ஈ, ஊ – மாமிசம், தசை, ஏ - அம்பு, ஐ ஐயம், தலைவன், ஓ – மதகுப்பலகை குறில் – நொ – துன்பப்படு, து – உண், குறில் – நொ – இந்நாட்டு அலையள்.

## தொடர் எழுத்து ஒரு மொழி

**130. பகாப்பதம் ஏழும் பகுபதம் ஒன்பதும்**
**எழுத்துஈறு ஆகத் தொடரும் என்ப.**

பகாப்பதம் இரண்டெழுத்து முதல் ஏழ் எழுத்து ஈறாகவும், பகுபதச் சொற்கள் இரண்டு முதல் ஒன்பது எழுத்து ஈறாக அமையும் என்றும் சொல்லுவர் புலவர்.

அணி, அறம், அகலம், அருப்பம், தருப்பனம், உத்திரட்டாதி – இரண்டு முதல் ஏழ் எழுத்து வரை வந்த பகாபதங்கள். கூனி, கூனன், குழையன்,பொருப்பன்,அம்பலவன், அரங்கத்தான், உத்திராடத்தான், உத்திரட்டாதியான் இவை இரண்டு முதல் ஒன்பது எழுத்து வரை வந்த பகுபதச் சொற்களாகும்.

## பகாப்பதம்

**131. பகுப்பால் பயனற்று இடுகுறி ஆகி**
**முன்னே ஒன்றாய் முடிந்துஇயல் கின்ற**
**பெயர்வினை இடைஉரி நான்கும் பகாப்பதம்.**

பிரிக்கப்படுதலினால் எந்தவிதப் பயனும் இன்றி இடுகுறியாகி நிற்கும் பெயர், வினை, இடை, உரி ஆகிய நான்கும் பகாப்பதச் சொற்களாகும்.



Scanned by CamScanner
Scanned by CamScanner

நிலம், நீர், காற்று, நெருப்பு – பெயர்ப் பகாப்பதங்கள் நட, வா, போ, உண், தின், செல் – வினைப் பகாப்பதங்கள் மண், கொல், தில், மற்று, என, என்று – இடைப் பகாப்பதங்கள் உறு, தவ, நனி, கவர், கழி, உரிப் பகாபதங்கள்.

## பகுபதம்

132. பொருள்இடம் காலம் சினை குணம் தொழிலின்
வருபெயர் பொழுதுகொள் வினைபகு பதமே.

பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் காரணமாக வருகின்ற பெயர்ச்சொற்களும் தெரிநிலையாகவும் குறிப்பாகவும் காலத்தைக் காட்டும் வினைச் சொற்களும் பகாபதச் சொற்களாகும்.

**பெயர்ச்சொற்கள்**

1. பொன்னன் – பெயர்ப்பகுபதம்
 (பொன் + அன்)
2. அகத்தன் – இடப் பெயர்ப்பகுபதம்
 (அகம் + அன்)
3. ஆதிரையான் – காலப் பெயர்ப் பகுபதம்
 (ஆதிரை + ஆன்)
4. கண்ணன் – சினைப் பெயர்ப்பகுபதம்
 (கண் + அன்)
5. சூரியன் – பண்புப் பெயர்ப் பகுபதம்
 (கருமை + அன்)
6. ஓதுவான் – தொழில் பெயர்ப் பகுபதம்
 (ஓது + ஆன்)

**வினைச்சொற்கள்**

1. நடந்தான், நடக்கின்றான், நடப்பான் – தெரிநிலை வினைமுற்றுப் பகுபதங்கள்.

2. நடந்த, நடக்கின்ற, நடக்கும் – தெரிநிலை பெயரெச்சப் பகுபதங்கள்

3. நடந்து, நடக்க, நடக்கின – தெரிநிலை வினையெச்சப் பகுபதங்கள்

4. பொன்னன், கரியன், செய்யன் – குறிப்பு வினைமுற்றுப் பகுபதங்கள்



Scanned by CamScanner
Scanned by CamScanner

5. நடந்தவன், இழந்தவன், படித்தவன் - தெரிநிலை வினையால் அணையும் பெயர்ப் பகுபதங்கள்

6. இல்லாதவன், பொல்லாதாவன், - குறிப்பு வினையால் அணையும் பெயர்ப் பகுபதங்கள்.

## பகுபத உறுப்புக்கள்

133. பகுதி விகுதி இடைநிலை சாரியை
சந்தி விகாரம் ஆறினும் ஏற்பவை
முன்னிப் புணர்ப்ப முடியுமெப் பதங்களும்.

பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, விகாரம் ஆகிய ஆறு உறுப்புகள் சொற்களின் பொருளமைதிக் கேற்ப ஏற்பவைகளைக் கூட்டி முடிப்பர் அறிவுடையோர். எல்லாச் சொற்களும் எல்லா பகுபத உறுப்புக்களையும் பெற வேண்டுமென்ற நியதியில்லை. பொருளமைதிக் கேற்ப பொருந்துவனவற்றை மட்டும் உறுப்பாகச் சொற்கள் ஏற்றுக்கொள்ளும்.

உண்டான் – உண் + ட் + ஆன்

பொருளமைதிக்கேற்ப பகுதி விகுதியுடன் இடைநிலை மட்டும் பெற்று வந்துள்ளது.

உண்டனன்

உண் + ட் + அன் + அன்

பகுதி + இடைநிலை + சாரியை + விகுதி பெற்று வந்துள்ளது.

நடந்தனன்

நட + த் + த் + அன் + அன்

பகுதி , இடைநிலை, ஆகிய ஐந்தும் பெற்று விகாரத்தால் தகர ஒற்று நகர ஒற்றாய் திரிந்து வந்துள்ளது.

பகுதி – பொருள் தருவதால் பகுத்து முன் நிற்கும் பகுதி.

விகுதி – பகுதியின் பொருளை மாறுபடச் செய்வது அதாவது திணை, பால், எண் இடம் காட்டி அமைவது.

இடைநிலை – பகுதி, விகுதி இரண்டிற்கும் இடையில் அமைவது காலங்காட்டும் தன்மையுடையது.

சாரியை – பகுதி, விகுதி ஆகிய உறுப்புக்களை இணைப்பதற்குப் பயன்படுவது.

சந்தி – உறுப்புக்கள் இணையும்போது தோன்றக் கூடிய எழுத்து சந்தி.

விகாரம் – சந்தி எழுத்து அமைகின்ற வேறுபாடு விகாரம்.



Scanned by CamScanner

Scanned by CamScanner

134. தத்தம்

பகாப்ப தங்களே பகுதி ஆகும்.

பெயர்ப்பகுபதச் சொற்கள், வினைப் பகுபதச் சொற்கள் ஆகியவற்றில் முதலில் நிற்கக் கூடிய பகாப்பதங்களே பகுதியாகும். தமிழில் அடிச்சொல் வேர்ச்சொல் என்று அழைக்கப்படுகிறது. பொருள் தரும் பகுதியாக அமையும். மேலும் பிரிக்க முடியாத தன்மை கொண்டது. பிரிப்பினும் பொருள் இருக்காது.

பொன்னன், குழையன், அகத்தன் – பொன், குழை, அகம் என்பன பெயர்ப் பகுதிகள்

நடந்தான், சென்றான், படித்தான் – நட, செல், படி என்பன வினைப்பகுதிகள்.

செய்யன், கரியன் – செம்மை, கருமை, பண்புப் பெயர்ப் பகுதி.

## பண்புப் பகுதிகள்

135. செம்மை சிறுமை சேய்மை தீமை
வெம்மை புதுமை மென்மை மேன்மை
திண்மை உண்மை நுண்மை அவற்றுஎதிர்
இன்னவும் பண்பிற் பகாநிலைப் பதமே.

செம்மை முதல் நுண்மை ஈறாகச் செல்லப்பட்ட பதினொன்றும் இவைகளுக்கு எதிரான 1. வெண்மை, அருமை, பொன்மை, பசுமை, 2. பெருமை 3. அண்மை 4. நன்மை 5. தண்மை 6. பழமை 7. வண்மை 8. கீழ்மை 9. நொய்ம்மை 10. இன்மை 11. பருமை ஆகியவையும் பண்புப் பெயர்ப் பகுதிகளாகும்.

மேற்சொன்ன பகுதிகளை மேலும் பிரிக்கலாம் ஆயினும் பண்பு பொருளன்றி வேறு பொருளில்லை. எனவே, இவை பொருள் நிலையால் பகாப்பதமாகவும் சொல் நிலையால் பகுபதங்களாவும் அடைநின்றன.

### பண்புப் பெயர்ப் பகுதிக்கு சிறப்பு விதி

136. ஈறுபோதல் இடைஉகரம் இய்யாதல்
ஆதி நீடல் அடி அகரம் ஐயாதல்
தன்ஒற்று இரட்டல் முன்னின்ற மெய்திரிதல்
இனமிகல் இணையவும் பண்பிற்கு இயல்பே.



Scanned by CamScanner

Scanned by CamScanner

இறுதியுலுள்ள மை விகுதி கெடுதல், நடுவில் நின்ற உகரம் இகரமாதல், முதல் நின்ற குறில் நெடிலாதல், முதல் நின்ற அகரம் ஐகாரமாதல், தன் மெய் மிகுதல், முன் நின்ற மெய் வேறு மெய்யாகத் திரிதல். வரும் இனமான எழுத்து மிகுதல் இவை போல்வன பிறவும் பண்புப் பெயர்க்கு இயல்பாகும்.

1. மைவிகுதி கெடுதல்

செம்மை + மீன் – செம்மீன்

2. இடையில் நின்ற உகரம் இகரமாதல்

கருமை + அன்

கரு + அன் – உகரம் இகரமாதல்

கரி + அன் – கரியன்

3. முதலில் நின்ற குறில் நெடில் ஆதல்

முதுமை + ஊர்

மூது + ஊர் = மூதூர்

4. முதலில் நின்ற அகரம் ஐ காரமாதல்

பசுமை + தமிழ் – ஈறுபோதல் உகரம் கெடல்

பை + தமிழ் = பைந்தமிழ்

5. தன் ஒற்று இரட்டல்

சிறுமை + ஊர்

சிறு + ஊர்

சிற்ற் + ஊர் – சிற்றூர்

6. முன் நின்ற மெய் திரிதல்

செம்மை + ஆம்பல் – செம் + ஆம்பல்

சேம் + ஆம்பல் – சேத் + ஆம்பல் – ஆம்பல்

7. இனம்மிகல்

பசுமை + தழை – பசு + தழை – பசுந்தழை

இணையும் என்றதனால் கார்முகில், பைந்தார் போன்றவற்றின் திரிபுகளையும் நோக்குக.

## தெரிநிலை வினைப்பகுதி

137. நடவா மடிசீ விடுகூ வேவை
நொப்போ வௌ உரிஞ் உண்பொருந் திரும்தின்
தேய்பார் செல்வவ் வாழ்கேள் அஃகுஎன்று
எய்திய இருபான் மூன்றாம் ஈற்றவும்
செய்யென் ஏவல் வினைப்பகாப் பதமே.



Scanned by CamScanner

Scanned by CamScanner

நட, வா, மடி, சீ, விடு, கூ, வே, வை, நொ, போ, வௌ, உரிஞ், உண், பொருந், திரும், தின், தேய், பார், செல், வவ், வாழ், கேள், அஃகு ஆகிய இருபத்து மூன்றும் செய் என்னும் ஏவல் பொருளில் அமையும் வினைப் பகாப் பதங்களாகும்.

**உயிரீற்று வினைப் பகுதிகள்**

நடந்தான் – நட

வந்தான் – வா

மடிந்தான் – மடி

சீத்தான் – சீ

வெளவினான் – வெள

விட்டான் – விடு

கூவினான் – கூ

ஏவினான் – ஏ

போனான் – போ

**மெய்யீற்று வினைப்பகுதிகள்**

உரிஞினான் – உரிஞ்

உண்டான் – உண்

பொருநினான் – பொருந்

திரும்பினான் – திரும்

நின்றான் – நின்

தேய்த்தான் – தேய்

பார்த்தான் – பார்

சென்றான் – செல்

வவ்வினான் – வவ்

வாழ்ந்தான் – வாழ்

கேட்டான் – கேள்

மேற்சொன்ன பதினொன்றும் மெய்யீற்று வினைப்பகுதிகள் ஆகும்.

## ஏவல் பகுதிக்குச் சிறப்பு விதி

**138. செய்யென் வினைவழி விப்பி தனிவரின்**
**செய்விஎன் ஏவல் இணையின்ஈர் ஏவல்.**

செய் என்ற ஏவல் வினையுடன் வி, பி இவற்றுள் ஒன்று இணையுமாயின் செய்வி என்னும் ஏவலாய் அமையும். அதனுடன் இவ்விகுதிகள் தன்னொடும் பிறிதோடும் இணைந்து வருமாயின் செய்விப்பி என்னும் ஏவற்பகுதியாய் அமையும்.

செய் – செய்வி – செய்விப்பி

உண் – உண்பி – உண்பிப்பாய்

செல் – செல்வி – செல்விப்பாய்



Scanned by CamScanner
Scanned by CamScanner

## வினைப்பகுதிகளுக்குப் புறனடை

**139. விளம்பிய பகுதிவேறு ஆதலும் விதியே.**

சொல்லிய ஏவல் பகுதிகள் வேறுபட்டு வருவதைப்போல வினைப்பகுதிகள் வேறுபட்டு வருவதும் உண்டு.

நட - நடத்து, நடத்துவிப்பி

மேற்கூறியதில் நட தன்வினை இவையே வேறுபட்டு பிறவினைப்பகுதியாக வருவதைக் காணலாம்.

## விகுதி

**140. அன்ஆன் அள்ஆள் அர்ஆர் பம்பார்**
**அஆ குடுதுறு என்ஏன் அல்அன்**
**அம்ஆம் எம்ஏம் ஓம்மொடு உம்ஊர்**
**கடதற ஐஆய் இம்மின் இர்ஈர்**
**ஈயர் கயஉம் என்பவும் பிறவும்**
**வினையின் விகுதி பெயரினும் சிலவே.**

அன் முதலாகச் சொல்லப்பட்ட முப்பத்தேழு விகுதிகளும் பிறவும் தெரிநிலை வினைமுற்று விகுதிகளாகும். இவற்றுள் சில பெயர்ப்பகுபதங்களுக்கும் விகுதியாய் அமையும்.

**தெரிநிலை வினை முற்று விகுதிகள்**

பகுதியோடு இணைந்து இன்னபால் இன்ன திணை இன்ன இடம் என்று அறிவிப்பவை விகுதிகள்.

| தன்மை ஒருமை (8) | தன்மை பன்மை (9) |
|---|---|
| கு,டு,து,று | கும்,டும்,தும்,றும் |
| என்,ஏன் | எம்,ஏம், |
| அன், அல் | அம்,ஆம்,ஓம் |

| முன்னிலை ஒருமை (3) | முன்னிலை பன்மை (3) |
|---|---|
| இ,ஐ,ஆய் | இர்,ஈர்,மின் |

**படர்க்கை (13)**

| ஆண் | பெண் | பலர் | ஒன்றன் | பலவின் |
|---|---|---|---|---|
| அன்,ஆன் | அள்,ஆள் | அர்,ஆர் ப,மார் | து,டு,று | அ,ஆ |



Scanned by CamScanner
Scanned by CamScanner

# இடைநிலை

## பெயர் இடைநிலை

**141. இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் இயம்பலின்
பகுதிவிகுதி பகுத்து இடை நின்றதை
வினைப்பெயர் அல்பெயர்க்கு இடைநிலை எனலே.**

அறிவுடையோரால் இயற்றப்பட்ட இலக்கியத்தைப் பார்த்து அவ்இலக்கியத்திற்கு இலக்கணம் சொல்லுதலின் முன் இடைநின்றமை சொல்லப்பட்ட பகுதியையும் விகுதியையும் பிரித்து இடைநின்றதை வினையால் அணையும் பெயர்களுக்கு இடைநிலை என்று சொல்லுதல் வேண்டும்.

அறிஞன் , கவிஞன், வினைஞன், என்பவற்றில் ஞ் இடைநிலையாதல் காண்க.

ஓதுவான்,பாடுவான், செல்வான் – வ் இடைநிலை

இடைச்சி, புலைச்சி,வலைச்சி – ச் இடைநிலை

பாணத்தி, வண்ணாத்தி – த் இடைநிலை.

# வினை இடைநிலை

## இறந்தகால இடைநிலை

**142. தடற ஒற்று இன்னே ஐம்பால் மூவிடத்து
இறந்த காலம் தரும்தொழில் இடைநிலை.**

தகர, டகர, றகர ஒற்றுக்களும் (த்,ட்,ற்) இன் என்னும் குற்று ஒற்றும் ஐம்பால் மூவிடத்தும் இறந்த காலத்தைக் காட்டும் வினைப் பகுபத இடைநிலைகள் ஆகும்.

பார்த்தான். படித்தான் – த்

உண்டான், கண்டான் – ட்

சென்றான், கொன்றான் – ற்

உறங்கினான், எழுதினான் – இன்

த், ட், ற், இன் இறந்தகால இடைநிலைகள்.

## நிகழ்கால இடைநிலை

**143. ஆநின்று கின்று கிறு மூ இடத்தின்
ஐம்பால் நிகழ்பொழுது அறைவினை இடைநிலை.**

ஆநின்று, கின்று, கிறு இம்மூன்றும் ஐம்பால் மூவிடத்தும் நிகழ்காலத்தை உணர்த்தும் இடைநிலைகளாகும்.



Scanned by CamScanner

Scanned by CamScanner

நடவா நின்றான், உண்ணாநின்றான் – ஆநின்று

நடக்கின்றான், வருகின்றான் – கின்று

நடக்கிறான், வருகிறான் – கிறு

கிறு, கின்று, ஆநின்று நிகழ் கால இடைநிலைகள்.

**எதிர்கால இடைநிலை**

**144. பவ்வ மூவிடத்து ஐம்பால் எதிர்பொழுது**
**இசைவினை இடைநிலை யாம்இவை சிலஇல.**

பகர ஒற்றும் வகர ஒற்றும் ஐம்பால் மூவிடத்தும் எதிர்காலத்தை உணர்த்தும் இடைநிலைகளாகும். முக்காலமும் உணர்த்தும் ஒன்பது இடைநிலைகளும் சில முற்று வினையெச்சங்களுக்கு இல்லை.

Smark

## காலம் காட்டும் விகுதிகள்

**145. ரவ்வொடு உகர உம்மை நிகழ்பு அல்லவும்**
**தவ்வொடு இறப்பும் எதிர்வும் டவ்வொடு**
**கழிவும் கவ்வொடு எதிர்வும் மின்ஏவல்**
**வியங்கோள் இம்மார் எதிர்வும் பாந்தம்**
**செலவோடு வரவும் செய்யும் நிகழ்வு எதிர்வும்**
**எதிர்மறை மும்மையும் ஏற்கும் ஈங்கே.**

1. ரகர மெய்யோடு கூடிய உகர விகுதியும் உம் விகுதியும் (று,றும்) இறந்த காலத்தையும் எதிர்காலத்தையும் காட்டும்.

சென்று, சென்றும் – இறந்த காலம்
சேறு, சேறும் – எதிர்காலம்

2. தகர மெய்யோடு சேர்ந்த உகர விகுதியும் உம் விகுதியும் இறந்த காலமும் எதிர்காலமும் காட்டும்.

வந்து, வந்தும் – இறந்த காலம்
வருது, வருதும் – எதிர்காலம்

3. டகர மெய்யோடு கூடிய உகர விகுதியும் உம் விகுதியும் இறந்த காலம் காட்டும்.

உண்டு, உண்டும் – இறந்தகாலம்

4. ககர மெய்யோடு கூடிய உகர விகுயும் உம் விகுதியும் எதிர்காலத்தைக் காட்டும்.

உண்டு, உண்டும் – எதிர்காலம்

5. ஏவல் வினைமுற்று விகுதிகள் – மின், ஈர், உம், ஆய் எதிர்காலம் உணர்த்தும்

உண்மின், உண்ணீர், உண்ணும், உண்ணாய் – எதிர்காலம்



Scanned by CamScanner

Scanned by CamScanner

6. வியங்கோள் வினைமுற்று விகுதிகள் க, இய, இயர் எதிர்காலம் காட்டும்.

வாழ்க, வாழிய, வாழியர் – எதிர்காலம்

7. இ, மார் – எதிர்காலம்

சேறி (செல்வாய்), உண்மார் – எதிர்காலம்

8. ப – இறந்தகாலம், எதிர்காலம் இரண்டும் உணர்த்தும்

உண்ப (உண்டார்) இறந்தகாலம்

உண்ப (உண்பார்) எதிர்காலம்

9. செய்யும் என்முற்றும் நிகழ்காலம், எதிர்காலம் இரண்டையும் உணர்த்தும்

உண்ணும் – நிகழ்காலம்

உண்ணும் – எதிர்காலம்

10. எதிர்மறை ஆ கார விகுதி முக்காலம் உணர்த்தும்

உண்ணா நின்றான் – இறந்தகாலம்

உண்ணா நிற்கிறான் – நிகழ்காலம்

உண்ணா நிற்பான் – எதிர்காலம்.

## வடமொழி ஆக்கம்

தமிழ் மொழியில் பிறமொழிக் கலப்புச் சொற்கள் மிகுதியாகக் காணப்படுகின்றன. அவற்றுள் வட மொழியும் ஒன்று. இம்மொழி தம்முள் இரண்டறக் கலந்து தமிழ் போலவே வழங்கப்பட்டு வருகின்றன. அவற்றைத் தமிழில் அமைக்கும் முறை பற்றிக் கீழ்க்கண்டவாறு நன்னூலார் அமைத்துக் காட்டுகின்றார்.

ஆரிய மொழியில் இருந்து தமிழ் மொழியோடு கலந்து வழங்கும் சொற்கள். வடமொழிச் சொற்கள் என்றழைக்கப்படுகிறது. அச்சொற்கள் தமிழுக்கும் ஆரியத்திற்கும் உரிய பொது எழுத்தால் வழங்கப்பட்டு வருவதை தற்சமம் என்று அழைப்பர்.

அமலம், கமலம், காரணம், குங்குமம் இவை பொது எழுத்தால் ஆகிய தற்சமம் மொழிகள்.

ஆரியத்திற்கே உரிய சிறப்பு எழுத்தாலும் பொது எழுத்தாலும் பொதுவும் சிறப்பும் ஆகிய ஈரெழுத்தாலுமாகித் திரிந்து விகாரம் பெற்று தமிழில் வந்து வழங்கும் வடமொழி தற்பவம் எனப்படும்.

சுகி, போகி, சுத்தி



Scanned by CamScanner

Scanned by CamScanner

இவை சிறப்பெழுத்தாலாகி விகாரம் பெற்றுத் தமிழில் வழங்கும் தற்பவ மொழிகள்.

அரன், செயல், ஞானம், சுரி

இவை பொதுவும், சிறப்புமாகிய ஈரெழுத்தாலுமாகி விகாரம் பெற்றுத் தமிழில் வழங்கும் தற்பவமொழிகள்.

## திரியும் எழுத்துக்கள்

146. இடையில் நான்கும் ஈற்றில் இரண்டும்
அல்லா அச்சு ஐவருக்கம் முதல் ஈறு
யவ்வாதி நான்மை ளவ்வாகும் ஐஜம்
பொதுவெழுத்து ஒழிந்த நால் ஏழும் திரியும்.

ஆரிய மொழி உயிரெழுத்துக்கள் (அச்சு) பதினாறில் இடையில் உள்ள நான்கும் இறுதியில் உள்ள இரண்டும் தவிர மீதமுள்ள பத்து எழுத்துக்கள் ஆரியத்திற்கும் தமிழுக்கும் பொதுவாகும்.

ஆரிய மொழி மெய்யெழுத்துக்கள் முப்பத்தேழில் க ச ட த ப என்னும் ஐந்து, ஈற்றில் நின்ற ங ஞ ண ந ம என்னும் ஐந்தும் ய ர ல வ என்னும் நான்கும் ள வு ம் ஆகிய பதினைந்தும் இருமொழிகளுக்கும் பொதுவாக வரும்.

க ங ச ஞ ட ண த ந ப ம ய ர ல வ ள – பொதுவானவை. உயிர் 10 - ம் மெய் 15 ம் ஆக இருபத்தைந்து எழுத்துக்களும் தமிழுக்கும் ஆரியத்துக்கும் பொதுவானவை. இவை நீங்கிய இருபத்தெட்டு எழுத்துக்கள் ஆரியத்திற்குரிய சிறப்பெழுத்துக்கள் ஆகும். இவை தமிழில் வந்து வழங்கும் போது ஒலிப்பிற் கேற்பத் திரிபடையும்.

ஆரிய உயிரெழுத்துக்கள் (அச்சு (அ) சுரம்) 16

அ ஆ இ ஈ உ ஊ ரு ரூ லு லூ ஏ ஐ ஓ ஔ அம் அஃ.

**ஆரிய மொழி வடமொழி ஆவதற்குச் சிறப்பு விதி**

147. அவற்றுள்
ஏழாம் உயிர் இய்யும் இருவும் ஐவருக்கத்து
இடையில் மூன்றும் அவ்வம் முதலும்
எட்டே யவ்வும் முப்பது சயவும்
மேலொன்று சடவும் இரண்டு சதவும்
மூன்றே யகவும் ஐந்திரு கவ்வும்
ஆ ஈறு ஐயும் ஈஈறு இகரமும்.



Scanned by CamScanner

Scanned by CamScanner

1. ஏழாம் உயிரெழுத்து இகரமாகவும் இருவாகவும் திரியும்.

2. ஐந்து வர்க்கத்துள் இடை நின்ற மூன்று மூன்று எழுத்துக்களும் அவ்வருக்கத்தினுடைய முதலெழுத்தாகத் திரியும்.

3. எட்டாம் மெய்யாகிய ஜ கரம் யகரமாகத் திரியும்.

4. முப்பதாம் மெய்யாகிய ச சகரமாகவும் யகரமாகவும் திரியும்.

5. முப்பத்தோராம் மெய் சகரமாகவும் சகரமாகவும் திரியும்.

6. முப்பத்திரண்டாம் மெய் சகரமாவும் தகரமாகவும் திரியும்.

7. முப்பத்து மூன்றாம் மெய் (ஹ) அகரமாகவும் சகரமாகவும் திரியும்.

8. முப்பத்தைந்தாவது மெய் (க்ஷ) இரண்டு சகரமாகத் திரியும்.

9. ஆகாரம் ஐகாரமாகத் திரியும்.

10. ஈகாரம் இகரமாகத் திரியும்.

1. ஏழாம் உயிர் ரு (ர்) இ, இரு ஆதல் – ரிஷபம், இடபம், மிர்கம் - மிருகம்

2. ஐந்து வர்க்கத்தில் இடை நின்ற மும்மூன்று எழுத்தும் அவ்வருக்கத்தின் முதலெழுத்தாதல்.

நகம், நாகம், சருச்சரை எனவும்
சலவிதி, விசயம், கூடம் எனவும்
பீடம், சடம், கூடம் எனவும்
தலம், திரை, தினம் எனவும்
பலம், பந்தம், பாரம் எனவும்

மேற்கண்டவாறு இடை நின்ற மும்மூன்று எழுத்தும் வருக்கத்தின் முதலெழுத்தாயின.

3. பங்கஜம் – பங்கயம் என எட்டாம் மெய் மொழி இடையில் யகரம் ஆதல்

4. முப்பதாம் மெய் சகரமும் இடையில் சகரமும் யகரமும் ஆதல்

சங்கரன், பாசம், தேயம்

5. முப்பத்தோறும் மெய் முதலிற் சகரமும் இடையிலும் கடையிலும் டகரம் ஆதல்

ஷண்முகம் – சண்முகன், விஷம் – விடம், பாஷை – பாடை

6. முப்பத்திரண்டாம் மெய் முதலில் சகரமும் இடையில் சகரமும் தகரமும் ஆதல்.

ஸபை – சபை, வாஸம் – வாசம், மாஸம் – மாதம்.



Scanned by CamScanner

Scanned by CamScanner

7. முப்பத்தி மூன்றாம் மெய் முதலில் அகரமும் இடையிலும் கடையிலும் ககரம் ஆதல்.

ஹரன் – அரன், மோஹம் – மோகன், மஹீ – மகி.

8. முப்பத்தைந்தாம் மெய் மொழியிடையில் இரண்டு சகரம் ஆதல்.

பகக்ஷம் – பக்கம்

9. ஆகார ஈறு ஐகார ஈறு ஆதல்

மலா – மாலை

10. ஈகார ஈறு இகர ஈறு ஆதல்

புரீ – புரி, மஹீ – மகி

## மொழி முதலான சமஸ்கிருதச் சொற்கள் தமிழில் வருதல்

**148. ரவ்விற்கு அம்முதல் ஆம்முக் குறிலும்**
**லவ்விற்கு இம்முதல் இரண்டும் யவ்விற்கு**
**இய்யும் மொழிமுதல் ஆகிமுன் வருமே.**

தமிழ் எழுத்துக்களில் மொழி முதலில் வராத எழுத்துக்கள் சமஸ்கிருதத்தில் மொழி முதலாக வரும். ரகரத்தை முதலாக உடைய சொற்கள் அ,இ,உ என்ற உயிர்களை முன் பெற்று வரும். யகர முதற்சொல் இகரத்தைப் பெற்று வரும்.

ர – ரங்கன் – அரங்கன், இராமன்

ரோமம் – உரோமம்.

ல – லாபம் – இலாபம்

லோபம் – உலோபம்

ய – யக்கன் – இயக்கன்

## சொற்களின் இடையில் திரிதல்

**149. இணைந்தியல் காலை யரலக்கு இகரமும்**
**மவ்வக்கு உகரமும் நகரக்கு அகரமும்**
**மிசைவரும் ரவ்வழி உவ்வும் ஆம்பிற.**

இரண்டு மெய்கள் இணைந்து ஓரெழுத்தைப் போல நடக்கும்



Scanned by CamScanner
Scanned by CamScanner

வகரங்களுக்கு உகரமும். நகரத்திற்கு அகரமும் மேலே வந்து வட சொற்கள் அமையும். ரகரத்திற்குப் பின் உகரமும் வரும். பிற வேறு பாட்டையும் பெறும்.

ஈரெழுத்து இணைந்து ஓரெழுத்துப் போல் வரல்.

சுக்லம் – சுக்கிலம் , வக்ரம் – வக்கிரம்

மெய்யை அடுத்து மகரமும் வகரமும் நிற்றல் உகரம் தோன்றல்.

பக்மம் – பதுமம், பக்வம் – பக்குவம்

மெய்யை அடுத்து நகரம் இருப்பின் அகரம் வருதல்.

நந்தம் – ரகனம் – அரதனம்

ரகர மெய்க்குப் பின் உகரம் வரல்

அகத்தம் – அருத்தம்

பிற என்றதனால் சக்தி – சத்தி, ஸ்தூலம் – துலம்

## தமிழுக்குரிய சிறப்பெழுத்துக்கள்

**150. றனழ எஒவ்வும் உயிர் மெய் உயிரளபு**

**அல்லாச் சார்பும் தமிழ்பிற பொதுவே.**

முதலும் சார்புமாக தமிழ் எழுத்துக்கள் நாற்பது. அவற்றுள் ற, ன, ழ, எ, ஒ இவ்ஐந்து முதல் எழுத்துக்களும், உயிர்மெய், உயிரளபெடை அல்லாத எட்டு சார்பெழுத்துக்களும் தமிழுக்கே உரிய சிறப்பு எழுத்துக்களாகும்.

## பதவியல் முற்றிற்று



Scanned by CamScanner

Scanned by CamScanner